திராவிடநாடு

நாளைக்கே மீட்சி!

[ம. முகமது மைதீன்]

அறமற்ற படை மறவர்
திறனற்று வீழ்வார்
அறங் கொண்ட படை மறவர்
திறங் கொண்டு வாழ்வார்
வெறி கொண்ட சீனர்; நோய்
மறிபோல மாள்வார்
நெறி கொண்ட நம்வீரர்
செறிவோடு மீள்வார்

பக்கபலம் திக்கெங்கும்
நம்பக்க முண்டு
பாமரரும் அறிவாரே
நாம் செய்யும் தொண்டு
தக்க தொரு நெறியான
நன் மக்களாட்சி
தழைத் தோங்கக் கிளம்பிடுவீர்
நாளைக்கே மீட்சி.

உதவுவது நமது பிறப்புரிமை

—[ச. கனகராசன்]—

"வேந்தே! தங்களைக் காணத் தூதுவர் ஒருவர் வந்துள்ளார்! வரச் சொல்லட்டுமா?"

"தூதுவரா? ஒருவேளை பகை மூட்டிப் படையெடுக்கலாம் என்றெண்ணித் தூதுவன் வந்துள்ளானா? எது எப்படி இருந்தாலும் வரச்சொல்."

"தூதுவர் வந்தால் படையெடுப்பான் என்று நினைக்க வேண்டியதில்லை. அப்படியே படையெடுத்தால் நாம் ஏன் பயப்பட வேண்டும். நம் படைகள்தான் வலிமையுள்ளனவாயிற்றே! எப்படை வந்தாலும். நம் படைமுன் எம்மாத்திரம்! அதோ வருவது தூதுவரோ?"!

"தூதுவரே! வந்த காரணம் யாது?"

"நான் துரியோதனின் தூதுவன்! எங்கள் நாட்டவர்க்கும் பாண்டவர்க்கும் சண்டை நடக்கிறது. அவ்வீரர் கட்டு உணவு கிடையாது. உணவு இல்லாததால் படை வீரர்கள் சோர்ந்துவிட்டனர். சண்டை நடத்த முன்பே ஏற்பாடு செய்ததால் உணவுப் பொருள்கள் பற்றுமை ஏற்பட்டது. தங்கள் நாடு வளம் படைத்த நாடு என்பதாலும், பசித்தவர்க்கு இல்லை என்னுது வழங்கும் கொடையுள்ளம் படைத்தவர்கள் என்பதாலும் தங்களிடம் உணவுப் பொருள் வேண்டி வந்துள்ளேன்"

"அப்படியா? உணவுப் பொருள் வேண்டியது உள்ளது. போதும் போதும் எனும் அளவுக்கு அனுப்புகிறேன். அமைச்சரே! துரியோதனனுக்கு வேண்டியதை அனுப்ப, தக்க ஏற்பாடு செய். அதுபோலப் பாண்டவர்க்கும் உணவு இல்லாமல் படை வீரர்களும் பசியால் துடிப்பார்கள். அவர்கள் கேட்காவிட்டாலும் நம் வீரர்கள் மூலம் அவர்கட்கும் வேண்டியதை அனுப்பு. பசித்தவர்கள் யாராயினும் அவர்கள் பகைவர்களாக இருந்தாலும் அவர்கள் பசியைப் போக்குவதே நம் கடமை."

"ஆகட்டும் மன்னவா! நம் களஞ்சியத்தில் உள்ளவை அனைத்தையும் வேண்டுமானாலும் அனுப்புகிறேன்."

○

பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் சண்டை நடந்தபோது சேரநாட்டை யாண்டு கொண்டிருந்தவன் உதயஞ்சேரலாதன் ஆவான். அவன் வீரத்திலும் தீரத்திலும் மிக்கவனாதால் தமிழ் நாட்டின் பெரும் பகுதியைத்தன் ஆட்சியின்கீழ் வைத்திருந்தான். நெல்லும் கரும்பும் குறைவின்றி விளைந்தன. தமிழ் நாட்டின் முக்கியச் செல்வம் நெல்லும் இன்னபிற உணவுப் பொருள்களும்தானே! அவை குறைவின்றி நிறைந்து கிடந்தது; அவன் களஞ்சியத்தில். இதனையறிந்த துரியோதனாதிகள் உணவு வேண்டித் தூதுவனை அனுப்பினார்கள். தூதுவனைக் கண்ட மாத்திரத்திலேயே இல்லையென்று சொல்லாது, வேண்டியமட்டும் அனுப்பினான். வேண்டிக் கேட்காத பாண்டவர்கட்கும் அனுப்பினான். அதுதானே தமிழனின் மரபு.

படை வீரர்கட்குச் சோறு அளித்தான், சேரன் உதயஞ்சேரலாதன் என்ற செய்தியை,

"..................................
அலங்குளைப் புரவி ஐவரோடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம் பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருது
களத்து ஒழியப்
பெருஞ் சோற்று மிகுபதம் வரையாது
கொடுத்தோய்
.................................."

என்று "மண்திணிந்த நிலவனும் நிலன் ஏந்திய விசும்பும்" என்று தொடங்கும் புறநானூற்றின் இரண்டாவது பாடல்மூலம் அறியலாம்.

உதயஞ்சேரலாதன், பாண்டவர் படைக்கும் கௌரவர் படைக்கும் இல்லை என்னுது உணவுப் பொருள்களைக் கொடுத்ததால் பசியால் துடித்த படைவீரர்கள் அவரைப் போற்றிப் புகழ்ந்தவண்ணம் உண்டனர். படைவீரர்களும் உணவு தந்ததால் அம்மன்னரை வாழ்த்தினர்! அந்நாட்டின் குடிமக்களும் வாழ்த்தினர்! முரஞ்சியூர் முடிநாகராயர் எனும் தமிழ்ப்பெரும் புலவரும் போற்றினர்!

பால் புளித்துப்போனுலும், பகல் இருண்டு போனுலும், மணங்களின் நெறி பிறழ்ந்துபோனுலும் மாறுபாடில்லாத மந்திரிகளுடன், பொற்சிகரங்களையுடைய இமயமலையைப் போலவும், பொதியமலையைப்போலவும் நடுக்கமின்றி வாழ்வாயாக என்ற கருத்துடன்,

"பாஅல் புளிப்பினும்! பகல் இருளினும்!
நாஅல் வேத நெறி திரியினும்
திரியாச் சுற்றமொடு முழுதுசேன்
விளங்கி
நடுக்கின்றி நிலீஇயரோ அத்தை!
அடுக்கத்துச்
சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
அந்தி அந்தணர் அருங்கடன் இறுக்கும்
முத்தீ விளக்கில் துஞ்சும்
பொற்கோட்டு இமயமும் பொதியமும்
போன்றே"

என்று போற்றிப் பாடினுர்.

அவன் கொடை வழங்கியதால், நாட்டுமக்களும், நல்லோர்களும், புலவர்களும் போற்றிப் புகழ்ந்தனர். அவன் தன்னிடத்திலுள்ள உணவுப் பொருள்களைக் கொடுக்காமல் இருந்திருந்தால் போற்றியோர் அனைவரும் தூற்றுவர். பாடிய புலவர்களும் பாடாது விட்டுவிடுவர்.

அவனைப்போல் வள்ளல்கள் வாழ்ந்த நாடுதான் நம் தமிழ் நாடு. பாரியும், காரியும், ஓரியும், பேகனும் குமணனும், அதியனும் வாழ்ந்த நாடல்லவா நம்நாடு. அவர்கள் வழி வந்தவர்கள் அல்லவா நம்மவர்—நாம். அன்று அந்த அளவுக்கு வாரி வழங்க, நாடு செழிப்புமிக்கதாய், சீர் மிக்கதாய் விளங்கியது. 'இல்லை என' வந்தோர்க்கு 'இல்லை என' சொல்லியவர் கிடையாது என்ற பெருமைபடைத்த வரலாற்றுக்குச் சொந்தமானவர்கள் நாம்.

இன்று, ஈனப்புத்திபடைத்த சீனர்கள் இன்று நம்மை வம்புக்கிழுத்து, எல்லையில் தொல்லைகொடுக்கின்றனர். படைகளைக்கொண்டு நம் மண்ணை அபகரிக்க—ஏகாதிபத்திய வெறிகொண்டு எல்லையில் பெரும் படை கொண்டு தாக்குகின்றனர்.

எல்லையில் போராடும் நம் வீரர்கட்கு—நம் சகோதரர்கட்கு இந்த நேரத்தில் நம்மால் இயன்ற உதவி

(13-ம் பக்கம் பார்க்க)

முதலில் செப். 8--பிறகு பேச்சு!

ர் 21] ஆண்டு சந்தா ரூ. 8 (2—12—62) தனிப்பிரதி 16 காசு [இதழ் 14

சீன வெறியரின் பாசாங்கும் பசப்பும்
நம்முடைய உறுதியைக் குலைத்துவிடாது

★

போர் நிறுத்தம் என்ற பூச்சாண்டியால்
நம்முடைய நிலை மாறிவிடாது

★

இது
பதுங்கிப் பாயும் திட்டம் என்பதை
அரசியலறிஞர்கள் உணர்ந்துவிட்டனர்

★

சிறுமதிச் சீனரின் சதி ஆலோசனையின் விளைவே
இந்தப் போர் நிறுத்தம்

★

எனவே, நமது உறுதியைச் சிறிதும் தளரவிடாது
வெற்றி கிட்டும்வரை போர் புரிவோமாக

★

முதலமைச்சர் நேரு அவர்களின் நிபந்தனைப்படி
செப்டம்பர் 8-க்குச் சீனர் போய்விடட்டும்

★

எந்தச் சமாதானமும் அதன் பின்னர் என்பதை மண்ணாசை பிடித்த
சீன அரசுக்கு
மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறுவோமாக

வெற்றி நமதே

'புறப்படு மகனே'

—[கிருட்டினன்]—

எனது அன்புள்ள அமுதாவுக்கு,

ஐந்தாண்டிற்குப் பின்னே இன்று தான் எனது செல்வங்களின் நினைவும், உனது உருவமும் என் கண் முன் காட்சிதந்தன. அதன்பின், இன்று உனக்கு மடல்தீட்ட முனைந்தேன். என்னைவிட்டுப் பிரிந்த நீ எப்படியெப்படியெல்லாமோ கனவுகள் கண்டிருப்பாய், எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியிருப்பாய். துன்பங்கள் வந்தபோதும் துவளமாட்டாய் தாங்கிக்கொண்டிருப்பாய்? எத்தனை, எத்தனை இன்னல்களையோ அனுபவித்திருப்பாய்? அதையெல்லாம் நினைத்துப்பார்த்தேன்; அந்த நேரத்தில் எனது உள்ளம் நீ வஞ்சகன்! துரோகி! கொடியவன்! என்று என்னை சுட்டிக்காட்டிற்று.

என் தங்கமான புயல்வீரன், வெற்றிவீரன் இருவரையும் பிரிந்து, உன்னையும் விட்டுவந்து ஆண்டு ஐந்து முடிந்து ஆருவது அடியெடுத்துவைத்துவிட்டது.

"யாழினிது குழலினிது என்பர், தம்மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்"

என்ருர் வள்ளுவர்.

ஆம், அந்த மழலைச் சொல்லைக் கேட்டு மகிழ்ந்துகொண்டிருந்தேன். நான் எங்குசென்று வந்தாலும், இன்னலோடு வீடுதிரும்பினுலும் எதிர்நின்று இன்முகம்காட்டி, இன்சொல்பேசி என் சோர்வை நீக்கி வந்த என் அன்புச் செல்வங்களையும் உன்னையும் பிரிந்துவரக் காரணம், வறுமையால் நான் செய்த செய்கைதான் என்பதை நீ அறிவாய்.

அந்த வறுமையின்கொடுமையை இப்போது நினைத்தாலும் நெஞ்சம் நெக்குருகி நிற்கிறது. எனது எண்ண அலைகள் எங்கெங்கெல்லாமோ ஓடுகின்றன. ஐயோ! அந்த வறுமைப் புயலைத் தாங்கிக்கொண்டு எப்படித்தான் வாழ்கின்ருயோ?

வயிற்றுக்குக் கஞ்சியின்றி, வாழவழியற்று, வறுமையிலே வதைபட்டு ஒருநாள் நான் செய்த திருட்டுக் குற்றத்திற்காக அனுபவிக்க, வாட்டத்துடன் வந்து சேர்ந்தேன் மத்திய சிறைக்கு!

மூன்ருண்டு முடிந்து விடுதலையடைந்த செய்தியை நான் உனக்குத் தெரிவிக்கவில்லை. ஊருக்கு வருவதாக எண்ணமும் இல்லை. அதன் காரணத்தால் அன்று நான் வீரர் படைக்குச் சென்றுவிட்ட தகவலையும் தெரிவிக்கவில்லை. வறுமையால் வதைபட்டுவந்த எனக்கு வாழ்வளித்தது அரசு! அரசாங்கம் வெளியிட்ட பரிசுப் பத்திரம் எனக்கு பாதையைக் காட்டிற்று. ஐந்து ரூபாய் பத்திரத்தில் முதல் பரிசு கிடைத்திருக்கிறது.

அதனுல்தான் உன்னையும் நம் அன்புச் செல்வங்களையும் காணத் துடித்துக்கொண்டிருக்கிறேன். அடுத்த வாரத்தில்வரும் அந்தத் தொகையை பெற்றுக்கொள்.

இன்னும் சில நாட்களில் உன்னையும், நம் செல்வங்களையும் காண ஓடோடி வரப்போகிறேன்.

உனது அன்புள்ள,
நீலவண்ணன்.

கடிதத்தைக்கண்ட அமுதா அடைந்த இன்பத்தை அளவிட்டுக் கூறமுடியாது! வாயாலோ சொல்லாலோ வர்ணிக்கமுடியாது. கண்ணை இழந்தவன் கண்பார்வை பெற்றதைப்போன்று அளவில்லா மகிழ்ச்சி கொண்டாள். கணவனைப் பற்றி அறியாது இருந்தவள், கடிதத்தைக்கண்டு களிப்பெய்தினுள்.

எல்லையில்லா இன்பம் கொண்டிருந்த அமுதா தன் கண்ணெதிரே கண்ட கனவுகளும், காட்சிகளும் எதிர்காலத்தில் கிட்டும் என்று எண்ணிக்கொண்டிருந்தாள். பள்ளி சென்று மாலையில் பறந்தோடி வந்து "அம்மா! பசி" என்று கேட்டுக்கொண்டே தன்னைச் சூழ்ந்துநின்ற பிள்ளைகளை வாரி அணைத்துத் தழுவி முத்தமிட்ட போது, கண்ணீர் கொட்டுவதைக் கண்ட சிறுவர்கள், "அழாதீர்கள் அம்மா! அப்பா வந்துவிடுவார்கள்" என்று தம் இனிய மொழியால் இன் சொல் கூறியதைக் கேட்ட தாய், தன் எண்ணத்தை எங்கோ கொண்டுபோய்விட்டாள்! பின் உணவு உண்டு உறங்கச் சென்று விட்டார்கள்.

அன்று இரவு பெட்டி படுக்கையுடன் தன் கணவர் வந்திறங்கிப் பிள்ளைகளை அணைத்து முத்தமிடும் காட்சியையும், பழம் கனிகளையும், ரொட்டிகளையும் பிள்ளைகளுக்கு தன் இருகைகளால் அள்ளிக்கொடுக்கும் காட்சியையும் கண்டு களித்தாள். அவன் ஓடிவந்து அவளை கட்டியணைத்து முத்தமிட்டான். பிள்ளைகள் பக்கம் கையை நீட்டினுள் வெட்கத்தோடு அமுதா.

ஓட்டைக் குடிசையில் தன் குழந்தைகள் கடுங்குளிர் தாங்காது கத்தும்போது, கொட்டகைக்குள் அணைத்துக்கொண்டு உறங்கும் காட்சி நீங்கி ஓட்டு வீடு கட்டி உல்லாச வாழ்வு வாழ்ந்துகொண்டிருந்தாள். கொழுனன் ஓசையெழாமல் கதவைத் திறந்தான்; அதைப் பார்த்த அமுதா கொல்லெனச் சிரித்துவிட்டாள். சிரிப்பொலி கேட்ட சிறுவன் அம்மா என்று கூப்பிட்டான். கண் விழித்துப் பார்த்தாள். எல்லாம் கனவு என்பதை உணர்ந்து கண்ணீர் உகுத்தாள்.

கனவு நீங்கிய அமுதா, தன் பிள்ளைகளிடம் கண் திறவுங்கள் என்று கூறி; உங்கள் அப்பா நாளை வரப் போகிருரடா என்ருள். விழிகளைத் திறந்து பார்த்த பிள்ளைகள் மறுபடியும் தூங்கிவிட்டன.

அமுதாவுக்கோ தூக்கம் வரவில்லை. கீழ்வானம் மெள்ள மெள்ள வெளுத்தது. கீச்சான் கத்திற்று, காகம் கரைந்தது, கோழி கூவிற்று,

(13-ம் பக்கம் பார்க்க)

காரும் காவும்
வந்ததடி சிரித்ததடி

—ந. இறைவன், பி. ஏ.,—

"என்ன தலைவி! தனிமையில் இன்பமா?" "ஆமாண்டி! தனிமையில்தான் இன்பம். துணையில்லாப் பருவத்தில் எனக்குத் துணையாக இருந்தது தனிமைதாண்டி! அது தந்த இனிமையைத்தான் நான் இப்பொழுது எண்ணி எண்ணி ஏங்குகிறேன். ஏனோ தெரியவில்லை, தனிமையும் எனக்கு இப்பொழுதெல்லாம் இனிமையை வழங்க மறுக்கிறது. தளிரோடு தளிராய், கொடியோடு கொடியாய், மலரோடு மலராய், மணத்தோடு மணமாய் நான் இந்தக் காவினிலே வாழ்ந்திருக்கிறேன். உறவாக இருந்த அவற்றையெல்லாம் இன்றெனக்குப் பகையாக மாற்றிவிட்டுச் சென்றானேடி பாவி மகன். எங்களைப் பிரிந்து அவனோடு அவனால் வாழ்ந்தாயே... அவனில்லை என்றதும் எங்களோடு உறவாட வருகிறாயே! உன்னோடு எங்களுக்கு உறவென்ன எனக் கேட்டுக் கொடியும் தளிரும் மணமும் மலரும் என்னோடு பகை கொண்டால் என்னடி செய்வேன் நான்.

துணையென்று வந்தான். இணையென்று வாழ்ந்தேன். துயர் தந்து போனான்!";

"அன்னத்தை அழையுங்கள். அவனை மறவுங்கள் தலைவி!"

"என்னத்தையடி நான் சொல்வேன். அன்னத்தை அழைத்தேன்—அவனை மறப்பதற்கு. அதுவும் துயர் தந்ததடி!"

"என்னம்மா இது! அன்னமுமா துயர் தந்தது!"

"ஆமாண்டி தோழி! அன்னமும் தான் துயர் தந்தது. அன்னத்தை வாவென்றழைத்தேன். அவைகள் இணை இணையாகத் துணையோடு வந்து என்னைத் துயர் கொள்ளச் செய்தன"

"அதனால்தான் சற்றுமுன் அன்னங்களை அடித்து விரட்டிக்கொண்டிருந்தாயோ தலைவி?"

"நீ எவ்வளவு நேரமாகத் தோழி இங்கிருக்கின்றாய்?"

நீங்கள் குளத்துக்கு வரும்போதே நானும் பின்னாலேயே வந்துவிட்டேன். குருகென்றால் கூட்டி வைத்து மகிழ்வாயே......சற்றுமுன் குருகு ஒன்று அருகுவரக் கோல் கொண்டு எறிந்தாயே! அதையெல்லாம் பார்த்துக்கொண்டுதான் நானிருந்தேன்."

"என்னடி செய்வேன். பார்க்கும் பொருளெல்லாம் பகைப் பொருளாய்த் தோன்றுதடி! காவும் பகையெனக்கு! கூவும் குயிலும் பகையெனக்கு! பூவும் பகையெனக்கு! பொழுதும் பகையெனக்கு! தாவும் கொடி மேவும் தளிரும் பகையெனக்கு!"

"நானும் பகைதானோ? நவிலுங்கள் தலைவியதை!"

"வானத்து அடியுள்ள வையமே பகைதாண்டி! வானமும் அது தாண்டி! நானே எனக்குப் பகையென்றால் ...... நீ அதற்கு விதி விலக்கா?

ஆனால் ஒன்று, இன்றெனக்குப் பகையாக உள்ளவை எல்லாம் அவன் வந்தவுடன் எனக்கு உறவாக மாறும். எனவே, நீ பகை என்றவுடன் பதறிவிடாதே. மாலையும் சோலையும் பகை. மயிலும் குயிலும் பகை. ஆனால், அவன் வந்தால் அவைகள்தான் எனக்கு உற்ற உறவு. நீயும் அப்படியே. உறவு இருந்தால்தான் பகைவரும். உறவே இல்லை என்றால் உலகத்தில் துறவு நிலைதானே. அங்கே பகையேது?

"தலைவி, துயரை மறைக்க வழியொன்று சொல்லவா?"

"துயரை மறக்க வழியா...? என்ன வழியடி அது!"

"அவனை நினைத்து நினைத்துத் தானே தலைவி துயர் கொள்கிறாய். உள்ளத்தின் உள்ளுக்குள் குமுறிக் கொண்டிருக்கும் அந்த நினைவுகளை என்னிடத்தில் சொல்லித் தீர்த்துக் கொள்."

"ஏண்டி தோழி! கதையைச் சொல் எனக்கேட்டால் சொல்லேன் என்றா மறுக்கப்போகிறேன். நினைவைச்சொல்லுங்கள், நிலைமை மாறுமென்று மறைமுகமாகக் கதை கேட்கிறாயே; அந்த அறிவைப் பாராட்டுகிறேன். துயர் குறையுமென்றால் என் தோளை நெகிழ்த்தவனின் உறவெல்லாம் உனக்கு உரைக்கின்றேன் கேள்"—

பருவம் வரும்முன்பே பாசத்தை வளர்த்துக்கொண்டவன் அவன். நான் சின்னவளாய் இருந்தபோழ்தே பின்னே சுழல்பவன் அவன். என்ன இது எனச்சினந்தால் எதுவுமில்லை என மொழிவான். நடப்பேன். நடப்பான். நடந்து வந்து காவில் நிற்பேன். நிற்பான். அமர்வேன். அமர்வான். அழகிது என்றுரைத்து எழுவேன். தொடர்வான். தொடர்ந்துவந்து 'அன்னம்' என அழைப்பான். என்னையா என நான் கேட்டால், உன்னையேன் நான் அழைக்கப்போகின்றேன். உறவுண்டோ நமக்குள்ளே எனக்கேட்டு என் உளக்கருத்தை அறிய முயல்வான். உறவில்லை என்பாள்போல் சினம்தவழ நான் நின்றால்...... அன்னமே நீ வா...உன்னைத்தான் நான் அழைத்தேன் என்று உரைசெய்து; குளம் நீந்தும் அன்னத்தில் உளம் வைத்தான்போல் நிற்பான். மெல்ல இடம் பெயர்வேன். என் செவியில் விழும்படியாய் 'அன்னம்' என்றழைப்பான். சின்ன இடை நோகாதோ எனக்கேட்பான். என்னைத்தான் சொல்வான். ஆனால் அவன் எண்ணமெலாம் அன்னத்தின்மேல் என்பதுபோல் அங்கேயே பார்த்திருப்பான்.

அடிமீது அடிவைத்துப் பின் தொடர்வான். தொடர்ந்து நடக்கையில் 'கொடி' என்பான். திரும்பி நான் பார்த்தால்......வழியெல்லாம் என்று வாக்கியத்தை முடிப்பான். பின்னர் சிறுதொலைவு பேசாமல் நடப்பான். மீண்டும் மானென்பான், மயிலென்பான். ஏனென்று நான் கேட்டால் மான்வேறு! மயில்வேறு! மங்கை நீவேறு அல்லவா என்றுரைத்து நிற்பான்.

இப்படியெல்லாம் செய்கின்ற அவன் எனக்குத் தொல்லை என்று சொல்லவும் முடியவில்லை. தொல்லையில்லை என்று தள்ளவும் முடியவில்லை.

நெருப்பென்று நானிருந்தும், நிழலென்று அவன் தொடர்ந்தால் வெறுப்பதற்கு எப்படியடி மனம் வரும். கொஞ்சம்கொஞ்சமாய் நெஞ்சம் கனியும். கனிந்த நெஞ்சத்தில் கவிதைபோல் இனிப்பான். நெஞ்சத்தின் இனிப்பு நெடுங்கதையானது.

வஞ்சியர்கள் குடமெடுத்து, வயல் வெளியில் நடைபயின்று; மலையடியில் உள்ள குளத்திற்கு நீராடச் சென்றோமே, நினைவுண்டோ தோழி!

நினைவுண்டோவா? நெஞ்சம் மறக்காத காட்சியல்லவா! அது!

எதையடி நீ சொல்கிறாய்!

வஞ்சியர்கள் நாம் கூடி, வரப்புகளில் நடந்து வயல் வெளியைக் கடந்து நீராடச் சென்றபோது சோலையில் நின்ற அவன், வாலைக் குமரியுனை வலைவீச மரங் கொடிகளில் மறைந்து மறைந்து நடந்ததைத்தானே கேட்கிறாய்! மறந்து விடும் காட்சியா அது.

மறைந்து நின்ற கள்வனுக்கு நீயும் நின் மதிமுகங் காட்டிக் காட்டி நிற்பாயே! நின்று நின்று சிரிப்பாயே! இதையெல்லாம் மறக்கவா முடியும்.

குறும்புக்காரத் தோழி ஒருத்தி இதனைக் கண்டுகொண்டு இசை முழக்கம் செய்தாளே நினைவிருக்கிறதா தலைவி!''

''நீதானேடி அந்தக் குறும்புக்காரி! நீ பாடிய அந்தப் பாட்டு யாரோ யாழெடுத்துப் பாடுதல்போல் என் செவிகளில் ஒலித்துக்கொண்டே இருக்கிறதடி. எங்கே மீண்டும் ஒருமுறை அந்தப் பாட்டைப் பாடேண்டி! நீ அந்தப் பாட்டைப் பாடினால் பழைய நினைவு வரும். சிறிது மகிழ்வும் வரும். எங்கே பாடு!

பாடவா தலைவி!

பாடடி நீ!

''செங்கதிரே! செங்கதிரே எங்கு
வந்தாயோ?
மங்கையிவள் முகந்தனைநீ
காணவந்தாயோ?—செங்க
பாவையர்கள் ஆடும் இடம் தேடி
வந்தாயோ
பாவடிக்கும் கவிஞனென எண்ணிக்
கொண்டாயோ?
பொன்னை ஒத்த என்தலைவி
முகத்தினிலே
பூவெடுத்து ஒத்துதற்கோ
ஓடிவந்தாய்நீ—செங்க
மலர்முகத்தில் தேன்குடிக்க
ஓடிவந்தாயோ?
மாங்கனியோ கன்னமென்று
மயங்கி நின்றாயோ?
சேல்விழியாள் கடைவிழிக்குக்
காத்திருந்தாயோ
வேற்படையோ என்று அஞ்சி
மறைந்துகொண்டாயோ?—செங்க
அவள் சிரிப்பொலியில்
உலகைக்காண ஓடிவந்தாயோ?
இச்சோலியில் உலகைக்காட்ட
நாடிநின்றாயோ?
சிரிப்பொலியை வளர்பிறையாய்
ஆக்க வந்தாயோ?
இச்சொலியைத் தொடர்கதையாய்
வளர்க்க வந்தாயோ—செங்க

ஏன் தலைவி அழுகிறீர்கள். நீங்கள் சிரிக்க வேண்டும் என்பதற்காகத்தானே நான் பாடினேன்.''

நீ அடியைப் பாடும்போது; மறைவிடத்தைவிட்டு அவன் வெளியில் வர; நீங்கள் எல்லோரும் என்னை அவனிடத்து விட்டு ஓடிவிட! ஆடிக் காற்றென ஓடிவந்த அவன், என்னை அள்ளியதும், அள்ளி அணைத்ததுவும்; சிலையென்று நின்ற என்னைத் தள்ளியதும்; தடுமாறி விழப்போன என்னைத் தடுத்ததுவும்; என்னழகைக் கவிதைதனில் தொடுத்ததுவும் முடித்ததுவும்; இதழ்கனியில் எடுத்ததுவும் கொடுத்ததுவும்; கனி என்று சொன்னதுவும், இல்லை! இல்லை! கவிதைதான் என்றதுவும் நினைத்தேன். நெஞ்சத்து நினைவு பஞ்சினில் நெருப்பானதடி!

இவையெல்லாம் அவன் படைக்கப் புன்சிரிப்பொன்றை உதிர்த்துவிட்டு நான் நடந்தேன்.

புன்னகைக்கு நெஞ்சை விலை பேசிப் போகின்ற பூங்கோதாய்! புகழ்பாவாய்! தன்னழகு காட்டி நடைபழகும் பொன்னழகுக் கொடியே! மின்னல் இடையே! கன்னல் மொழியே! நில்லென்றான் —நின்றேன்.

புன்னகைக்கே நெஞ்சை விலையாகப் பெற்றாயே? என்ன தருவேன் நான் உன் சின்ன இடை அசைவு தரும் அழகதனைச் சுவைப்பதற்கு எனக்கேட்டு, இடையைத் தொட வருவான். தொடுவதற்கு இடந் தராமல் தொலைவினில் போய் நிற்பேன். தொடர்ந்து வந்து அருகில் நின்று ...தள்ளித் தள்ளி நிற்கின்ற தளிர்க்கொடியே! அள்ளக் குறையாத அமிழ்தே! அள்ளி அணைக்கத் துடிக்கின்ற என்னைத் தள்ளி நில்லென்று தடைவிதிக்கும் உனக்கு உள்ளம் உண்டோ இல்லையோ என்று நான் மயங்குகிறேன். கிளி போலும் அழகியுன் நெளியிடையை வளைக்க நொடிப்பொழுது இடங் கொடுத்தால், மறுபொழுதே இறப்பெனினும் இன்பமென்றே நான் கொள்வேன் என உரைத்துக் குழைந்து நின்றான். இதற்குமேலும் என்னால் அவனைத் தொல்லைப்படுத்த முடியவில்லை!

இன்பமடை திறந்ததா தலைவி!

என்னடி அவ்வளவு வேகம்! நான் சொல்லத்தான் போகிறேன். நீ அதை மெள்ளத்தான் கேளேன்.

இரவு நான் வருகின்றேன் என்றேன். காத்திருப்பேன் நீ வருக என்றான். இரவு வரும் இன்பம் வரும்! இரவு வரும் இன்பம் வரும்... என்று அவன் உதடுகள் எத்தனை முறை அந்த வார்த்தைகளை உதிர்த்ததோ நான் அறியேன். நான் அவனைப் பிரியும்வரை......அவன் முணுமுணுத்தது அந்த வார்த்தைகள்தான். இது நடந்து எவ்வளவு நாளாகிறது தெரியுமாடி!''

''தெரியுந் தலைவி! ஓராண்டாகிறது.''

''அவன் என்னைக் கூடியது கார் காலம்! காவிலெல்லாம் மலர்கள் சிரித்தென்னை அழைத்தகாலம்!''

அதெல்லாம் எனக்குத் தெரியும் தலைவி! இரவு வந்ததா? இன்பத்தைக் கொணர்ந்ததா? என்பதை மட்டும் சொல்லுங்கள்!''

''கேளடி தோழி,''

இரவும் வந்ததடி
இன்பமும் தொடர்ந்ததடி
பூவும் விரிந்ததடி
பூமணமும் கமழ்ந்ததடி!

பாவினை இசைத்தபடி
பாவலரும் வந்தாரடி
மானென நின்றேனடி
தேனென உண்டாரடி!

இரவென்று சொன்னேனடி
இன்பமென்று வந்தாரடி:
காதலும் பிறந்ததடி
காவியமாய் வளர்ந்ததடி!

தென்றலை அழைத்தாரடி
சென்றுவரச் சொன்னாரடி
அன்னத்தை அழைத்தாரடி
என்னநடை என்றாரடி!

பூவினைத் தந்தாரடி
புன்னகையைக் கேட்டாரடி
கனியினைக் கொடுத்தாரடி
கன்னத்தைக் கேட்டாரடி!

கூந்தலைக் கலைத்தாரடி
கொத்துமலர் முடித்தாரடி
சின்னஇடை என்றாரடி
சேர்த்து என்னை அணைத்தாரடி!

இதழைச் சுவைத்தாரடி
இனிப்பைப் பழித்தாரடி
இடையை வளைத்தாரடி
இளந்தளிரைப் பழித்தாரடி!

குளிரைக் கொன்றாரடி
கோடியின்பம் குவித்தாரடி
பொழுதும் புலர்ந்ததடி
போகவிடை தந்தாரடி!

அன்று என்னைப் பிரிந்தாரேடி
இன்றுவரை காணோனடி
காரும் வந்ததடி
காவும் சிரித்ததடி!

கார் காலமும் வந்துவிட்டதடி! காவில் பூவும் சிரிக்கிறதடி காதலன் எங்கேயென்று கேட்டு! என்னடி பெண்ணே! அவன் உன்னடி வீழ்ந்தான் என்றாயே! கண்ணேடி மறைந்தானே. இப்பொழுது என்னேடி செய்வாய் நீ! தளிரென்றான் என்னை. தனதுரியின் மேலென்றும் சொன்னான் என்று சொல்லிச் சொல்லிப் பெருமைப் படுவாயே! உன் இளமையைப் பார்த்தானா? இளநகையைப் பார்த்தானா? பொருள் தேடப் போகின்றேன் என்று போன இடம் சொல்லாமல் போனானே! ஆவியனையான் என்றாய்! அவனன்றி வாழேன் என்றாய்! அவன் உன்னைப் பிரிந்தான்! அழுதழுது சாகின்றாய்! இங்குதான் வரவில்லை அவன். எங்குதான் உள்ளான் என்றேனும் தெரியுமோ? கார் வரும் முன்னே நான் தேரேறி வருவேன் என்றானே! தேரேறி வந்தவுடன் ஊரறிய உலகறிய வாழ்வோம் என்றானே! இதோ கார் பருவம் நான் வந்தேன். கார் பருவம் வருமுன்னே தேரேறி வருகின்றேன் என்றானே நின் காதலன். வந்தானா அவன்! என்று கேட்டுக் கேட்டு என்னை வாட்டுகின்ற இந்தக் கார் பருவம் கொல்லைப் புறத்திலே உள்ள முல்லையைப் பல்லெனக் கொண்டு என்னை எள்ளி நகைக்கிறது. என் செய்வேன்! பொல்லாத ஊர் என்மேல் சொல்லாத பழியில்லை! அவனை நினைத்தே நான் ஆற்றியிருக்கின்றேன். வருவானா தோழி! வந்தென் துயரத்தைத் துடைப்பானா தோழி!"

"நம்மைப் பழித்தவரை நாம் பழிக்க வருவான் தலைவி. நம்மைப் பகைத்தவரை நாம் பகைக்க வருவான் தலைவி. நம்மை நகைத்தவற்றை நாம் நகைக்க வருவான் தலைவி! !தேரேறி வருவான், உன்னை ஊரறிய மணப்பான். மனத்தில் கவலைதனை மாற்றியிரு நீ. வீட்டிற்குச் செல்வோமா தலைவி.

என்னடி அதற்குள்ளாக வீட்டிற்குப் போகவேண்டும்?

அதற்குள்ளாகவா என்கிறீர்களே! பொழுதென்ன இப்பொழுது தான் புலர்கிறது என்ற எண்ணமா? பூவினம் கூம்பின! புள்ளினம் புலம்பின! புறப்படு தலைவி போகலாம்!"

தோழியின் தோள்களில் கை போட்டுத் தோழியின் துணையால் அந்தத் தலைவி வீடு நோக்கி நடந்து கொண்டிருக்கிறாள். நம்மைக் காதலித்தவளும் இப்படித்தானே நலனழிந்து கிடப்பாள் என்றுஎண்ணித் தவிக்கின்ற காளையர் உள்ளங்கள் ......அதற்குள் இந்தத் தோழி வந்து தலைவியை அழைத்துக்கொண்டு ஓடிவிட்டாளே...இன்னும் கொஞ்ச நேரம் அவளுருவில் என் காதலியைப் பார்க்க முடியவில்லையே என்று ஏங்குவார்கள். பிரிந்து வந்து கூடியவர்கள் பிரிந்திருந்த போது தன்னன்பு எத்தகு துயரம் உற்றிருக்கும் என்பதை அறிய விரும்புவார்கள். அவர்கள் 'குறுந்தொகை'யை விரித்தால் இது போன்று வாடியிருப்போரையும்; ஊடித் திரிவாரையும்; பாடி மகிழ்வாரையும்; ஆடிக் களிப்போரையும் ஆயிரமாயிரமாகக் காணலாம்.

இதோ அந்தப் பாணனும் காதலன் கைபடாமல் 'பண்' இழந்து கிடக்கும் பெண்ணெனும் பெரும் யாழ்.........!

"இளமை பாரார் வளநசைஇச் சென்றோர்
இவணும் வாரார் எவனரோவெனப்
பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லைத்
தொகுமுகை இலங்கெயி றாக
நகுமே தோழி நறுந்தண் காரே"

----ஒக்கூர் மாசாத்தியார்
(குறுந்தொகை)

கதறியழும் கைக்குழந்தை

—சேரை. இரத்தினகுமார்—

கைக்குழந்தை கதறியழுதது! பால் கேட்டுத்தான் அழுதிருக்க வேண்டும். பச்சிளங்குழந்தை வேறு எதற்காக அழும்? அந்தக் குழந்தையின் தாய், "அழாதேடா கண்ணு" என்று சொல்லி அந்தக் குழந்தையின் அழுகையை நிறுத்த முயற்சித்துக்கொண்டிருந்தாள். ஆனாலும் குழந்தை அழுகையை நிறுத்துவதாக இல்லை.

துடித்தழும் குழந்தையைத் தொட்டிலிலிட்டு, ஆராரோ பாட

அந்தத் தாய், என்ன பணக்காரியா? இல்லையே! தொட்டில் கட்டத் துணிக்கு எங்கே போவாள்? உடுத்தியிருக்கும் சேலையைத் தவிர, வேறு ஒரு சேலையைத் தன்னுடையது என்று சொல்லக்கூடத் தகுதியற்ற நிலையிலல்லவா இருந்தாள்! நாதியற்றவளாக நடைபாதை வாசியாகவல்லவா இருந்தாள்!

குழந்தை அழுதுகொண்டிருந்தது! குனிந்து பார்த்தாள் தாய்! குழந்தை கையின் பெருவிரலை வாயில் வைத்து 'சப்பு'க் கொட்டியது. பால் கிடைக்காத காரணத்தால், குழந்தை அழமுடியாமல் அழுதது. பசியினால் குழந்தைக்கு அழக்கூட முடியவில்லை!

குழந்தை அழுவதைப் பார்த்த தாயும் அழுதாள். குழந்தை கூப்பாடுபோட்டு அழுதது! தாய் அரவமின்றி அழுதாள். அழுகின்ற தாயின் கண்களில் இருந்து வடிந்த கண்ணீர்ச்சொட்டு ஒன்று, குழந்தையின் உதட்டோரத்தில் விழுந்தது. அந்தக் கண்ணீர்ச் சொட்டை குழந்தை தன் நாக்கினால் நக்கிச் சப்புக்கொட்டியது! பாலென்று எண்ணியதுபோலும்! ஓசையின்றி அழுதுகொண்டிருந்ததாய், இதைக் கண்டதும் ஒப்பாரிவைத்து அழத் தொடங்கிவிட்டாள்.

அழுதுகொண்டிருந்தாய், அழுகையை நிறுத்தினாள். கொஞ்சம் தண்ணீரைக்கொண்டுவந்தாள். குழந்தைக்கு, அந்தத் தண்ணீரில் கொஞ்சம் கொடுத்தாள். தண்ணீரை குடித்த குழந்தை அயர்ந்து தூங்க ஆரம்பித்துவிட்டது. பிறகு தாய்க்கு என்னவேலை? அவளும் குழந்தையின் செயலைப் பின்பற்றினாள்.

புள்ளினங்கள், மக்களை எழுப்பப் பள்ளி எழுச்சிப் பாடலை பாடிக் கொண்டே சிறகடித்துப் பறந்து சென்றுகொண்டிருந்தன. பகலவன் நாட்டுக்குத் தன் பணியைச் செய்ய மெல்ல மெல்ல மேலே எழுந்து கொண்டிருந்தான். ஊர் மக்கள் ஒவ்வொருவராய் எழுந்து தம் தம் பணிகளைச் செய்யப் புறப்பட்டுக்கொண்டிருந்தனர்.

ஆனால்! காலைக் கதிரவனின் கதிரொளிகள் வீதியின் நடைபாதை ஓரத்திலே உறங்கிக்கொண்டிருந்த, அந்தக் குழந்தையின்—அந்த அனாதைத் தாயின் முகத்திலே 'சுள்' ளென்று உறைத்தபின்னும் எழுந்திராமல் உறங்கிகொண்டிருந்தனர்!

அவர்கள் உறங்கிக்கொண்டிருந்த நடைபாதையின் பக்கத்திலே இருந்த வீட்டிலிருந்து, "நாசமாப் போவான், அந்தப் பாட்டிலை தொடாதே, தொடாதே என்று ஆயிரம்தடவை சொன்னேனே! கேட்டாயா? காலங்காலத்தாலே சனியன்மாதிரி வந்து, பாட்டிலை உடைத்துவிட்டாயே! ஏண்டா கல்லுமாதிரி நிற்கிறாய்? அங்கே ரொட்டிக்கு மாவு பிசைந்துவைத்திருக்கிறேன், அதை எடுத்து வா" என்று அந்த வீட்டு அம்மாள் தன் மகனை வசவினாலேயே வாழ்த்தி விட்டு, உத்தரவும்விட்டுக்கொண்டிருந்தது கேட்டது.

பாட்டிலை உடைத்துவிட்டபையன் ரொட்டிக்குப் பிசைத்துவைத்திருந்த மாவைக் கொண்டுவந்து கொடுத்தான். உடைந்துவிட்ட பாட்டிலின் துண்டுகளை எல்லாம் பொறுக்கியெடுத்த அந்த அம்மாள், கண்ணுக்குத் தெரியாமலும், பொடியாகவும் கிடந்த கண்ணாடித் தூள்களை, அந்த மாவினால் ஒற்றி ஒற்றி எடுத்தாள்.

கட்டையிலே போவான்! கையையும், காலையும் வைத்துக்கொண்டு சும்மா இருக்கமாட்டேன் என்கிறானே!" என்று ஏசி, ஐந்தாறு அறையும், கொடுத்துவிட்டு, அந்த மாவை வெளியே வீசி எறிந்தாள் அந்த வீட்டு அம்மாள்.

வீசியெறியப்பட்டமா ஓங்கி ஒரு அறை கொடுப்பதுபோல்வந்து, உறங்கிக்கொண்டிருந்த குழந்தையின் தாய்மீது பொத்தென்றுவிழுந்தது. உறங்கிக்கொண்டிருந்த தாய் விழித்தெழுந்தாள். தன்மேல் என்ன வந்துவிழுந்தது?என்றுஅங்குமிங்கும் பார்த்தாள் அவள். அவளுடைய கண்களில் அந்த "ரொட்டி மா" தான் தென்பட்டது முதலில். அந்த மாவைப் பார்த்த தாய், ஆனந்தப் பட்டாள்! ஆச்சரியப்பட்டாள்! அந்த மா எங்கிருந்து வந்திருக்கும் என்று! 'கடவுளாய் பார்த்துதான் இதை நமக்கு கொடுத்திருக்கிறார்' என்று களிப்படைந்தாள் தாய்!

அந்த மாவைக் கையிலெடுத்தாள். கண்களில் ஒற்றிக்கொண்டாள். அந்த மாவில் கண்ணாடித் தூள்கள் ஒட்டிக்கொண்டிருக்கிறது என்பதைக் கண்டாளா அவள்? கடும்பசிதான் அவளுடைய கண்களை மறைத்துவிட்டதே!

பாழும் பசியினால் பார்வையிழந்திருந்த தாய் பரவசமடைந்தாள். ரொட்டி சுட அவசர அவசரமாய் அடுப்பைக் கூட்டினாள். அவளுடைய அடுப்பென்ன அடுக்களையிலா இருக்கிறது? அலம்பித் துடைத்துவிட்டுப்பற்றவைப்பதற்கு? இல்லையே! செலவின்றிச் சிக்கன முறையில் கூட்டப்படும் அடுப்பல்லவா அவளுடைய அடுப்பு! மூன்று கற்களைக் கூட்டினாள் அவள். அங்கொன்றும், இங்கொன்றுமாக, அலங்கோலமாகக் காட்சியளித்த கற்கள், இப்பொழுது அடுப்பாகக் காட்சி தந்தன!

குப்பை கூளங்கள்தான் எரிபொருள்! அவற்றைக் கூட்டினாள்! அடுப்பை மூட்டினாள்! பிச்சை எடுக்க வைத்திருந்த தட்டை, ரொட்டி சுடும் கல்லுக்குப் பதிலாக உபயோகித்தாள்.

ஊதினால் பறக்கும்பஞ்சைப்போலப் பத்து பதினைந்து ரொட்டிசுடவேண்டிய மாவை, இரண்டே ரொட்டியாகக் கைகளினாலேயே தட்டினாள் அந்தக் குழந்தையின் தாய். தட்டிய ரொட்டியை, காய்ந்துகொண்டிருந்த தட்டிலே போட்டுச் சுட்டாள் சுறுசுறுப்புடன்.

குழந்தை தூங்கிக்கொண்டிருந்தது. தூங்கிக்கொண்டிருந்த குழந்தையைத் தூக்கினாள் கையில், அந்த தாய்.

குழந்தையின் முகத்தை மகிழ்ச்சியுடன் பார்த்தாள். பார்த்தவள் பேசினாள், "பசியினால் வாடிய என் செல்வமே! பால் கேட்டு அழுதாயே! என் பசி தீர உணவு கிடைத்துவிட்டது. என் பசி தீர்ந்ததும், உன் பசி தீரப் பால் கிடைக்கும் என்னிடம்!" என்று.

குழந்தையுடன் பேசியவள், ரொட்டியையும் சுட்டுக்கொண்டாள். சுட்டுவிட்ட ரொட்டியை பிட்டுப் பிட்டுத் தின்றாள்! தொண்டையில் ரொட்டி சிக்கியதால், விக்கல் ஏற்பட்டது. அந்த விக்கலை அவள் பொருட்படுத்தாமலேயே, ரொட்டி பூராவையும் தின்று முடித்தாள். மீண்டும் விக்கல் எடுத்ததால், ஓடிச் சென்று ஒரு குவளை தண்ணீரைக் குடித்தாள். அவளுக்கு ஆயாசமாக வந்தது. அதை அவள் உண்ட களைப்பென எண்ணிக்கொண்டாள்.

அந்த ஆயாசத்துடனேயே குழந்தையிடம் வந்தாள் அவள். குழந்தை எழுந்துவிட்டது. கதறியழுது கொண்டிருந்தது. குழந்தையைப் பார்த்தாள் தாய். அவளுக்குக் குழந்தையைத் தூக்கவேண்டும் போல் தோன்றியது. ஆனால், தூக்குவதற்கு கை செல்லவில்லை! செல்ல மறுத்தது! அவளுக்கு வயிற்றுக்குள் என்னவோ செய்வதுபோலிருந்தது! பின் வாந்தி வந்தது! வாந்தி எடுத்தாள். ஆனால், இரத்தமாக! மீண்டும் மீண்டும், இரத்த, இரத்தமாக வாந்தி எடுத்தாள்! ரொட்டி மாவிலே ஒட்டிக்கொண்டிருந்த, கண்ணாடித் தூள்கள், அவளுடைய வயிற்றுக்குள் சென்று இப்பொழுது வேலை செய்ய ஆரம்பித்துவிட்டன!

சில நிமிட நேரங்களில் அந்தத் தாயின் உடல் தரையிலே சாய்ந்து, துடிதுடித்துக்கொண்டிருந்தது. கொஞ்ச நேரத்திலே அவளுடைய துடிதுடிப்பு நின்றது! அவளுடைய கடைசி மூச்சு காற்றோடு கலந்தது!

பசிக்கு உணவு கிடைத்தது என்று மகிழ்ச்சியை அணைத்துக் கொண்ட தாயை, இப்பொழுது மரணம் அணைத்துக்கொண்டது! குழந்தை கதறி அழுதது—அனாதையாக.

பிணத்தின் துணையோடு, அனாதையாக அழுதுகொண்டிருந்த குழந்தையை, அந்தப் பாதை வழியே போவோர், வருவோர் பார்த்தனர்! பரிதாபப்பட்டனர்! அனுதாபப்பட்டனர்! பசித்தழுத குழந்தைக்கு, பால் வாங்கக் காலணா கொடுக்க மறந்தவர்கள்-மறுத்தவர்கள், இப்பொழுது நாலணா, எட்டணா, ஏன்? ஒரு ரூபாய் கூடப் போட்டனர் அந்தக் குழந்தையின் முன்! பிணத்தின் முன்!

அந்தக் காசை — பணத்தை, அந்தத் தாய் பார்க்கவில்லை! குழந்தையும் அதை ஏறெடுத்து பார்க்கவில்லை! குழந்தை அந்தப் பணத்தை இலட்சியம் செய்யாமல் கதறியழுது கொண்டிருந்தது!

"எல்லை காப்போம்! தொல்லை அறுப்போம்!!"

[நிலவழகன்]

"மொகலாய மன்னன் — கஜினி மாமூது 18 முறை படை எடுத்தான்; இல்லை இல்லை, இந்தியாவைக் கொள்ளையிட்டான்; சூறையாடினான்; ஆக்கிரமித்தான் என்றுதான் சொல்லவேண்டும். படையெடுத்தான்" என்று வரலாறு.

ஆனால் — அதன் உள் நோக்கம்; இந்தியாவை ஆளவேண்டும்; இந்தியாவில் மொகலாயப் பரம்பரை வேரூன்ற வேண்டும்; ஓர் குடையின் கீழ் கொண்டு வர வேண்டும்; தன் 'ஆணைக்கு அகிலமே கட்டியங்கூற வேண்டும்"—என்று கருதிப் போர் எடுத்தான்; அல்ல! அல்ல!!

"பொருளாசை கொண்டு போர் தொடுத்தான். சோமநாதபுரம் ஆலயத்திலுள்ள செல்வங்களை; கொட்டிக் குவித்துக் கிடக்கும் கட்டி கட்டியான தங்கத்தை; வாரி வாரி மூட்டை கட்டிக்கொண்டு போகவேண்டும்" — என்று கருதினான்; கொண்டு போனான்—என்பது தானே ஒழிய வேறு ஒரு காரணமல்ல என்பது பெருநோக்கம் படைத்தோருக்கு, வரலாற்றைப் புரட்டியோருக்கு புரியும்—புரிகிறது.

வரலாறு—அவனைக் "கொள்ளைக்காரன்" என்றுதான் வசை பாடுகிறது. காரணம் — நீதி கோரி, நேர்மை பேசி, என் நாட்டின் எல்லை உன் காலடியில் சிக்கி—மிதியுண்டு கிடக்கிறது; அதைவிட்டுவிடு, நான்—என் நாட்டின் எல்லையை வரையறுக்கப் போகிறேன் என்று கேட்கவில்லை; கேட்டேன் பதில் ஏதும் பெறவில்லை. அதன் முடிவு போர் வரையறுக்கும் என்று பிரகடனப்படுத்திப் போர் தொடுக்கவில்லை. அப்படிச் செய்திருந்தால் "கண்ணியமுள்ளவன்" நேர்மை கோருவதாகும். ஒரு மன்னர்க்குரிய கடமை அது. செய்யவில்லை.

இதே நிலையைத்தான் 'சீனா' கையாண்டது — கையாள்கிறது. சீனா ஆக்கிரமிப்புக்கு மூன்று முக்கிய காரணங்கள்:

1. ஜனநெருக்கம் மிகுந்துவிட்டது; அவர்கள் சுமுகமாக வாழ வேண்டும்; அதற்கு வழி—
2. சீனாவை வாட்டி வதைக்கும் 'வறுமைப்பேய்' தலைவிரித்தாடுகிறது. அதை அடக்கவேண்டும்; அதற்கு வழி—
3. சீனாவை ஆட்டிப் படைக்கும் வல்லரசுகளின் விற்பனைப் பொருள்களுக்கு 'மார்கெட் – சந்தை' வேண்டும். அதற்கு வழி—

இம்மூன்று முக்கிய பிரச்சனைகளுக்கும் வழி காணவேண்டும். அந்தவழிக்குத்தூண்டத்தான் போர் — யுத்தம். அதற்குத் தக்க வழி; ஒரே வழி—இந்தியாவைத் தாக்குவது. ஏமாந்த நேரத்தில் ஏற்றம் பெறுவோம் என்ற நோக்கம். சீனா நப்பாசை கொண்டு போர் தொடுக்கிறது

"நவசீனா செய்தி நிறுவனம்"— ஒரு கட்டுரை வெளியிட்டிருக்கிறது. அது—விவரிப்பதாவது:

"இயற்கைச் செல்வங்களும், கனி வளங்களும், செழிப்பான புல்வெளிகளும் நிறைந்து செழித்தோங்கும் பகுதி "லடாக்"—என்றும்;

1959ம் ஆண்டு முதலே இப்பகுதி சீனாவின் ஆதிக்கத்தில் இருந்து வருகிறது. குளிர் அதிகம். சிலபல இடங்கள் கடல் மட்டத்திற்கு 16500 அடி உயரத்தில் இருக்கிறது. இங்கு மனித நடமாட்டம் மிகக் குறைவு. ஆனால்—இங்கேதான் இயற்கைச் செல்வங்களான 'மைக்கா, ஆபரணங்கள், ஸ்படிகங்கள் முதலிய கனி வளங்கள் ஏராளமாக இருக்கின்றன. உலகில் வேறு எங்கும் கிடைக்காத பச்சிலை மூலிகைகளும் கிடைக்கின்றன. இங்கு பெய்யும் பனி, வேனிற் காலத்தில் உருகி ஓடிச் சீனாவின் வரட்சியான "சிக்கியாங்"—மாநிலத்தை வளமாக்கி வாழ்வளிக்கிறது. "கொங்கா" — கணவாய்க்குத் தெற்கே அருவிகளால் புல்வெளிகள் பரந்து செழித்திருக்கின்றன. 'யாங்காங்' ஏரியில்மீன், வாத்து ஏராளமுண்டு. இதை நம்பியே பல இலட்சம் மக்கள் வாழலாம். ஏரியின் இருமருங்கிலும் வரட்சியிலும் வாடாது வளரும் "டமாரிஸ்க்" — என்ற புதர் ஒரு ஆள் உயரம் வளர்ந்திருக்கிறது. இவை கால்நடைகளுக்கு நல்ல மேய்ச்சல் நிலம். தகராறு உள்ள மேற்குப் பகுதியின் வடகோடியில் "காரகோரம"—என்ற கணவாய் உள்ளது. லடாக்கும் பஞ்சாபும் திபெத்தும் சந்திக்கும் இடம்தான் இதன் தென் கோடி. இந்தப் பகுதியின் எல்லையானது வரலாற்று ஏடு வரையறுக்கப்பட்டதே இல்லை. இந்த எல்லை வடக்கிலும், கிழக்கிலும் உள்ள விரிவான பகுதி எப்போதும் சீனரிடமேதான் இருந்து வருகிறது."

இப்படி அக்கட்டுரை விளக்கம் தருகிறது. வெள்ளையன் இந்தியாவை கைப்பற்றியவுடன் "மக்மோகன்" — எல்லைக்கோடு வரையறுக்கப்பட்டது. அப்போது கைகட்டி வாய்பொத்தி மௌனம் சாதித்தது. நாடு சுதந்தரமடைந்து ஏறக்குறைய 16-ஆண்டுகள் வாலாட்டாது கிடந்த சீனாவுக்கு, இன்று என்ன வந்தது? இத்தனை ஆண்டுகள் கேட்பதுதானே எல்லை என்று.

கரடுமுரடான இடங்கள் கண்கவரும் சோலையாகக் காட்சியளிக்கின்றன. தரிசு நிலங்கள் தங்கம் விளையும் பூமியாக மாறிவிட்டதே என்ற "மனத்தாங்கல்" — தானே தவிர, வேறு ஒன்றும் காரணமல்ல சீனாவின் ஆக்கிரமிப்புக்கு!

நம் உயிரை கொடுத்து; உதிரத்தைக் கொடுத்து எல்லை காப்போம்! தொல்லை அறுப்போம்!! நாம் பிறந்துவிட்டோம் என்றாவது ஒரு நாள் நிச்சயம் இறப்புலகை நாடத்தான் போகிறோம். அப்படி போகும் உயிர், நம்நாட்டின் எல்லையைக்காப்பதில், தொல்லை போக்குவதில் உயிரைப் பணயம் வைத்து நாட்டை மீட்டால், நாளை உலகம், நாளை வரலாறு வாழ்த்தும்; வாகைசூட்டும்! இறப்புலகில் மிதப்போம்; நம் உயிரில்; நம் இரத்தத்தில், நாடுவீணரின் கையிலிருந்து விடுபட்டதே என்ற பெருமிதம். ஆக—வாலிப உலகம், பெண்ணுலகம், வயோதிக உலகம் எல்லோரும் நாட்டைக் காக்க; நாட்டின் எல்லையைக் காக்க; நம் உடல் பொருள் உயிர்மூன்றையும் பணயம் வைப்போம். நாடுதான் முக்கியம். மாற்றார் நம்மண்ணில் 'ஊசி நாட்ட' இடம் கொடுக்கக்கூடாது. அதற்காகச் செங்குருதிவேண்டுமானாலும் குடம் குடமாகக் கொட்டி "எல்லை காப்போம்! தொல்லை அறுப்போம்!"

★

யாரே பிரிவார்?

—[பண்ணரசன்]—

வளங்கொழிக்கும் நெல்வயல்கள் — வானுயர்ந்த 'நெடுமரங்கள் — மங்கை முகங்காட்டும் மலர்கள் நிறை நற்குளங்கள்—மெல்லென்று தன் கரத்தால் மெல்லியரின் கட்டுடலைத் தொட்டுத் தடவிவரும் தூய மணத்தென்றல்! இத்தனைக்கும் ஓர் இடமாய் இருந்துவந்த ஊர் 'அது' தான்.

அங்கேதான் 'அவன்' வளர்ந்தான். தவழ்ந்தெழுந்து, நடந்து வளர்ந்த குழவி நிலையிலிருந்து, கன்னியர்கள் கண்ணுக்கு நல்விருந்தாய் மாறிவிட்டான். இன்று அவனுக்குக் கட்டமைந்த உடல், உளம் தொட்டுவிடும் பார்வை.

வேல் நுனியா, கூரம்பா என்று எண்ணும் வாள் விழியைப் பெற்றிருந்த ஒருத்தி, அன்னோன் பார்வையிலே ஓர்நாள் பட்டுவிட்டாள். இருநோக்கு ஒருநோக்காய் மாறிற்று. காதலெனும் இயற்கை மீட்டிவிட்ட உணர்வென்னும் ஓசை அவ்விருவர் உள்ளத்தில் எழுந்தது. பின்...?

○

செம்மணலின் கடலோரம், செடியின் காடு, சேர்வதற்கு வசதி தரும் பிற இடங்கள்—அத்தனையும் எழில் தன்னைப் பெறுவதற்கு அவ்விருவர் அன்றாடம் சந்தித்தனர். கங்குல் தேரேறி ஊர்சூழ வந்தவுடன் காதலர்கள் சந்தித்தல் முறையாயிற்று. இவ்வுறவை ஊர்அறிந்தது—உற்றோர் அறிந்தனர். காலம் விரைந்தது. காதலர்கள், களவியலை மாற்றிக் கற்பியலில் குடிபுக, மணவினை நடைபெற்றது.

○

மனிதர்கள் மனம்மாறும் நிலைபோல், இயற்கையெனும் மங்கையவள் தன் மனத்தில் மாறுபட்டாள். மாதம் மும்மாரி மறைந்தொழியத் தொடங்கியது. மழையில்லை—நாட்டில் வளமில்லை. சிரித்து இருந்த நிலம் சோர்வுற்று வாய் திறந்து, னத்தை "மழைதா!" என்று கேட்பதுபோல் இருந்தது — நிலங்களிடையே இருந்த நீள் வெடிப்பு, புள்ளினங்கள் தங்க — பூத்துக் குலுங்கி நின்ற ஆலும், அரசும் அடியோடு பட்டுப்போயின. ஆம்பல் மலரும், அல்லியோடு தாமரையும் காணக் கிடைக்கவில்லை--வான் மழையும் இல்லையதால்.

வறுமையது வாட்டிற்று. சாவோரின் எண்ணிக்கை பெருகிற்று. நிலை தாழ்வோர்கள் வருந்தினர். இல்லையெனும் கூக்குரலே எங்கும் எழும்பிற்று. தலைவனும் வருந்தினான் — தலைவியும் அப்படியே! ஊராரும், உற்றோரும் வருந்தும் நிலைகாண ஒப்பவில்லைத் தலைவனுக்கு. வறுமையெனும்பேயை விரட்டிவிட எண்ணிவிட்டான். காடும், மலையும், காட்டாறும் தான் கடந்து, பாலைநிலங் கடந்து பணந் திரட்ட — வறுமை நிலை விரட்ட முடிவுசெய்துவிட்டான். பாழும் கொடுமை பல, பாலை நிலத்திடையே இருந்தது. கீழே சுடு மணலும், மேலே கொடு வானும் வாட்டும்.

இத்தகைய பாலையைக் கடந்துதான் பொருளீட்டச் செல்லவேண்டும். பாலை நிலக் கொடுமையெலாம் படமெடுத்தாற்போன்று அவன் கண்ணெதிரே வந்தது. முகத்தில் வேதனை படர்ந்தது — கண்கள் கவலையைக் கக்கின. செல்லத் தயங்கினான். அவனது தயக்கத்தைக் கண்ட அருகிருந்தோர் 'அச்சமென' எண்ணினார்கள்.

பாலை நிலத்திடையே ஒருமுறை பார்த்திருந்த காட்சியொன்றே 'அவனை' அவ்வாறு தயக்கமுறச் செய்தது. அக்காட்சி......

○

நிழலற்ற நெடும் பாலை. உண்ண உணவில்லை அங்குள்ள யானைகட்கு. யானைக் கூட்டங்களில் ஆணும், பெண்ணுமாய் இரண்டு இருந்தன. அவைகள் காதலர்கள். ஒன்றையொன்று பிரிந்ததில்லை. பெண் யானைக்குப் பசி. ஏன்...? ஆண் யானைக்கும்தான். பசு மரங்கள் அங்கில்லை பசியாற. காதலியின் கொடும் பசியைக் காணப்பொறாத ஆணுக்கு வேதனையும், ஆத்திரமும் வந்தது. அங்கிருந்த பட்டமரங்கள் அதன் பார்வையில் பட்டன, சிறிது மகிழ்ச்சி. தன்னிடத்தே இருந்த தந்தமெனும் கொம்பதனால் மரத்தின் பட்டைகளைப் பிளந்தது. வலிவுள்ள மரங்கள் அவை. குத்திப் பிளக்கின்றபோது கொம்பொன்று ஒடிந்துகூடவிட்டது. என்றாலும் அதனைப் பொருட்படுத்தாது அருகிருந்த காதலிக்குப் பட்டைகளைப் பிளந்து உணவாக ஊட்டிற்று. உண்டது பெண் யானை. உவகை ஆண் யானைக்கு.

இத்தகைய சூழலில் இணைபிரியாது வாழ்கின்ற யானைகளின் அன்புவாழ் காட்சியே அவனை வாட்டிற்று. பொருளீட்ட வெளிச் செல்லின், தலைவன் அவளின் பிரிவைத் தாங்கான். இதனை எண்ணினான். வெப்பப் பெருமூச்சுத்தான்விடமுடிந்தது. பாலையிலும் இணைபிரியாது திரியும் — வாழும் விலங்கினங்களை நினைத்தான். எப்படிப் பிரிவது தன் ஈடற்ற தலைவியை.

இதுதான் அவன் தயக்கத்திற்குக் காரணம். இதனை யாரறிவார்? எவ்வாறு இவன் நவில்வான்?

ஆனால், ஒருவர் அறிந்தார் இந்த உத்தமனின் உள்ளத்தை. தானே அதனைப் பிறருக்குச் சொல்லிவிட முனைந்தார். உடன் புனைந்தார் இப் பாடலதை.

அந்த ஒருவர்தான் 'மதுரைத் தத்தங்கண்ணனார்.'பாடல் இதோ...!

"இருள்படு நெஞ்சத்து இடும்பை தீர்க்கும்
அருள்நன்கு உடைய ராயினும் ஈதல்
பொருள்இல் லோர்க்கு அஃது இயையா
தாகுதம்
யானும் அறிவேன் மனனே; யானைதன்
கொல்மருப்பு ஒடியக் குத்திச் சினம்
சிறந்து
இன்னா வெனில் இன்துணை ஆர
முளிசினை யாஅத்துப் பொளிபிளந்து
ஊட்டப்
புலம்புவீற் றிருந்த நிலம்படு வெஞ்சுரம்
அரிய அல்லமன் நமக்கே...
ஒண்தொடிக் குறுமகள் கொண்டனம்
செலினே!"

அகம்: 335

★

பெண் உள்ளம்

[பால்]

புகலவன் தன் இல்லம் அடைந்து விட்டான். ஆனால் இருளம் மாளோ தன் பவனியைத் தொடங்கி விட்டாள் கொடூரத் தன்மை கொண்டு. கொடிய மிருகங்களும் அவளுக்குப் பயந்து தத்தம் இல்லங் களில் முடங்கிக் கிடக்கின்றன. மனித இனமும் மறைந்துறங்குகின் றன. இரவுக் கோழிகளும் கூகை யும் ஆந்தைகளுமே அவள் வருகை யைப் பறைசாற்றிக் கொண்டிருக் கின்றன.

அனைத்து உலகமும் அமைதியி லாழ்ந்து உறங்குகிறது. ஆனால் முனுசாமியின் மனம் மட்டும் என் னவோ கடல் கொண்ட கலம் என— புயற் காற்றுக் கொண்ட பட்டம் எனத் துயரச் சூழலில் தத்தளித்துக் கொண்டிருக்கின்றது. அவன் முகத் திலே ஒருவித ஆர்வம்; உடலிலே ஒருவித பரபரப்பு: உள்ளத்திலே ஒரு வித துடிப்பு. அன்றாட வாழ்வில் கல்லையும் முள்ளையும் கனவேக மாகக் கடந்த அவன், இன்று அவை களெல்லாம் காடு மேடாகத் தோன் றிக் காட்டாறு என வீறுகொண்டு விரைவாக ஓடி வருகின்றான். அக் காட்டாறு எண்ணங்கள் பலவற்றை இடையிடையே அணைத்து வருகின் றது. அவனது எண்ண அலையின் ஒவ்வொரு துளியும் துன்பந்தாளாது துயருண்டு சிதறுகின்றன.

“நான் கண்ணால் காணவேண்டிய ஒரே செல்வம்,’’ என்று அவன் உள் மனம் அறை கூவுகிறது. கையில் மருந்துப் புட்டியுடன் ஓடி வருகின் றான்.

தூரத்தே ஒரு சிறு குடிசை. குடி சையின் கீற்றுக்கள் ஒவ்வொன்றும் அக்குடும்பத்தின் சோகக்கதை யைச் சொல்லிக்கொண்டிருக்கின் றன. குடிசையின் ஒரு மூலையில் மங்கி மங்கி ஒளிவிட்டுக்கொண்டி ருக்கின்றது ஒரு சிறு அகல்விளக்கு. அவ்விளக்கே அக்குடிசையை அரண்மனையின் ஒளியிலாழ்த்து கிறது. மற்றொருமூலையில் இலக்குமி முனகிக்கொண்டே படுத்திருக் கின்றாள்.

“இலக்குமி, இந்த மருந்தில் சிறி தாவது சாப்பிடு. அப்பொழுதுதான் உடம்பு சற்றுக் கலகலப்பாக விருக்கும்.’’

“அத்தான், இந்த இரவிலா சென்று மருந்து வாங்கிவந்தீர்கள்! மருந்துவாங்க உங்களிடம் பணம் ஏது? நீங்கள்தான் இரண்டு மூன்று நாட்களாக வேலைக்கும் செல்லவில் லையே...சொல்லுங்கள்......உங்கள் முதலாளி கொடுத்தாரா...?’’ இது இலக்குமியின் ஏக்கம் நிறைந்த சொற்கள்.

“நான் பிறகு சொல்கிறேன் இலக் குமி. நீ கவலைப்படாதே. இந்த மருந்தைமட்டும் சாப்பிட்டுடேன்.’’

அவள் அமைதியான முகம் ஒரு வகையான எண்ணங்களால் நிறைந்து, அகத்தின் அழகை அரும்புவிட்டுக் கொண்டிருக்கின் றது. அவள் உள்ளம், நாட்டுக் கொரு நல்லவனை, நாட்டுக் கடமை களை ஆற்றுபவனை, தன்னிகரில் லாத் தமிழனை, தனக்கென அன்றி பிறர்க்கென விளங்கும் பேராண்மை யுள்ள ஒரு காளையை இத்திருநாட் டுக்கு ஈன்று தரப்போகின்றோம்’ என்று பூரிப்பால் பூரித்து நிற் கின்றது.

‘இன்றோ நாளையோ தன் செல் வத்தைக் காண்போம், மகிழ்ச்சி கொள்வோம்’ என்று எண்ணி யெண்ணி இறுமாப்படைகிறாள். அவள் எண்ணியதில் தவறில்லை. எந்த ஒரு பெண்ணும் தன் மணத் திற்குப் பிறகு முதலிரவில் அடையும் மகிழ்ச்சியைவிட அவள் தன் மக வுச் செல்வத்தைக் காணும்போது தான் அதிக மகிழ்ச்சியை—உயர்ந்த மகிழ்ச்சியை—உண்மையான மகிழ்ச் சியைக் காண்கின்றாள் என்பதற்கு இலக்குமி ஒன்றும் விதிவிலக் கல்லவே.

மகப்பேற்றின்போது இலக்கு மிக்கு எவ்வித துன்பமும் நேராவண் ணம் இருக்கவேண்டும். அவளுக் கேதேனும் துன்பம் நேரிட்டால்... அதற்குமேல் முனுசாமியின் எண் ணம் செயல்பட முடியாமல் தடை பட்டுவிட்டது.

இவ்வாறு எண்ணமிட்டுக் கொண்டு அக்குப்பத்தின் கடைசி யில் தன் குடிசையின் வாயிலில் உட்கார்ந்திருக்கிறான் முனுசாமி. அவன் எதிரே உயர்தரச் கார் ஒன்று வந்து நிற்கின்றது. அதி லிருந்து, தோளில் ‘ஸ்டெதாஸ் கோப்’புடன் ஒரு மருத்துவர், ‘நர்ஸ்’ பின் தொடர முனுசாமியை நோக்கி வருகின்றார். அவர் பின்னே, சுமார் பதினெட்டு வயதிருக்கும். சுருள் கேசம்; எளிமைகொண்ட உடை யுடன் அழகு தவழும் இனிய தோற் றத்துடன் இளமங்கையொருத்தி தயங்கித் தயங்கி வந்துகொண் டிருக்கின்றாள். முனுசாமியின் விழி கள் நன்றி ததும்ப அவளை நோக்கு கின்றன.

மருத்துவர் இலக்குமியின் நாடி கண்டு சோதனை செய்து, அவ்விள மங்கையிடம் ஏதேதோ சொல்கின் றார்.

“பரவாயில்லை டாக்டர், நானே தருகின்றேன். எப்படியேனும் அவர்கள் நலமாயிருந்தால் சரிதான்.

இவைகளையெல்லாம் கேட்க முடி யாதவளாய் இலக்குமி மயக்கமுற் றுப் படுத்திருக்கின்றாள்.

இலக்குமி, தான் இன்றளவும் சுமந்து காத்திருந்ததை உலகுக் கீந்துவிடுகின்றாள். துன்பம் நீங்கு கின்றாள். அவளை அன்பு பொழி யும் கண்களுடன் அருமையாக நோக்குகின்றான் முனுசாமி. அமைதி கொள்கின்றான். அவன் மனமும் அமைதி கொள்கின்றது. ‘எங்கி ருந்தோ வந்தாள், இன்முகங்காட்டி னாள்; குலத்தைக் காத்தாள்; அவள் என் குலதெய்வமே; அவள் நீண்ட நாள் வாழவேண்டும்; அவளை நான் என்றும் மறவேன்.’ என்று அவன் மனம் அவ்விளமங்கை நல்லாளை வாழ்த்தியருளி நிற்கின்றது.

ஓர் புது உயிர் இவ்வுலகைக் கண்டுவிட்டது. நாட்கள் பலவற்றை நலமே கழித்தது. ஆனால், இவ் வுலகின் விளையாடல்களை எண்ணி யெண்ணி அழுகிறது. மறுமுறை சிரிக்கின்றது. ஏன் பிறந்தோம் என்ற ஏக்கத்தால் ஏமாற்றங் கொண்டு இவ்வுலகைப் பிறிதொரு முறை உற்றுநோக்கும் பாவனையில் உழலுகிறது.

அதன் பார்வையின் ஒளிஅலை களினூடேஅவ்விளவயது மங்கையி

னுருவமும்பிரதிபலிக்கின்றது. அழகு வதனம் அழிந்து, சுருள் கேசம் சுகுந்தம் மறுத்து, மெல்லிடை மெலிந்து, மேனியெலாம் ஒடுங்கி, மென்மைகுன்றி நீர்காணாத் தாமரையென வாடி நிற்கின்றாள். அவள் சுற்றமும் சூழலும் சுகம்தர மறுக்கின்றது. ஆனால், அவள் உள்ளமோ எண்ணியெண்ணி இன்பந் தாளாது இறுமாப்புறுகிறது, அழகு பெறுகிறது, அன்பு பொழிகிறது. அவள் மனம் வெகுதூரம் சென்று தடையுற்று நிற்கின்றது.

“பெண்ணே நீயோ எளிய குடும்பத்தைச் சேர்ந்தவள், மேன்மேலும் உன் உடலின் உணவுச் சக்தியைப் பெருக்கிக்கொள்ளவேண்டும். காரணம்? நீ அந்நேரத்திற்கு வேண்டிய மிதமிஞ்சிய இரத்தத்தைத் தந்துவிட்டாய். சிறிய தொகைப்பணமும் வேண்டாமென்கிறாய். பிரசவத்தின் போதே மடியவேண்டிய இரண்டு உயிர்களைக் காத்துநின்ற நீ உன் உடம்பைக் காக்கமாட்டாயா?” இது மருத்துவரின் பொருள்நிறைந்த அறிவுரையும்வேண்டுகோளுமாகும்.

ஆனால் இம்மங்கையோ வீராங்கனையென வீறுகொண்டெழுகின்றாள். “டாக்டர், என் வாழ்வில், என்னால் இருபெரும் மனித உள்ளங்கள் காக்கப்பட்டது குறித்து உள்ளம் உவகைகொள்கின்றேன். இதனால் என் உடல்நிலை பாதிக்கப்பட்டாலும் பரவாயில்லை. ஆனால், அத்தாயுள்ளம் தப்பித்ததே என்றெண்ணும்போது அம்மட்டும் எனக்கு இன்பமே. அத்தாயுள்ளம் என்னவெல்லாம் எண்ணியதோ. ‘தன் மகவுச் செல்வம் நாடெங்கும் போற்றப்படவேண்டும். நாட்டுச் சுதந்திரத்தைக் காக்கவேண்டும். தன்னாட்டு உரிமையைச் செவ்வனே ஆக்கவேண்டும். வள்ளுவன் கூறியதுபோல், பிறரால் சான்றோன் எனப் போற்றப்பட்டு, தான் பெரிதுவக்கவேண்டும்’ என்றெல்லாம் வரிந்து வரிந்து மனக்கோட்டைகள் கட்டியிருக்கும். அதை நான் இடித்துத் தகர்க்க விரும்பவில்லை டாக்டர். அத்தகு தாயுள்ளத்தை நான் ஏமாற்ற விரும்பவில்லை. ஒரு பெண் மனதைப் பிறிதொரு பெண்மனத்தால்தானே டாக்டர் அறியமுடியும். ஆகவே இத் தொகையை நான் பெற்றேனானால் என் தமிழ் உள்ளத்தை விற்றவளாவேன். எனக்கு வேண்டாம் டாக்டர்.”

தன்னையே எண்ணி மகிழ்கிறாள், இடையே, அவள் மேனி துவண்டு துவண்டு விழுகிறது. அவள் வாயினின்றும் குருதி கொட்டுகிறது. அன்று அவளைத் தியாக உள்ளத்தவளாக்கி இலக்குமியைக் காத்த குருதி இன்று அவளை நோய்க்கு ஆளாக்கி காக்கமுடியாது கலங்கி நிற்கிறது.

●

“பிரிவால் வளர் பரிவு”

—[‘சண்பக அருவி’ வெற்றிவில்லாளன்]—

செழுந்தமிழ் நிலத்தில் எங்கே எவை வளரவேண்டுமோ? அவை ஆங்கே முறை இம்மியளவும் பிறழாது வளர்ந்தது என்ற இன் செய்திகளை இன்றும் காலத்தின் பொற் பேழைகளெனப் பேறுபெற்ற இலக்கியங்கள் இயம்புகின்றன. குறிஞ்சி நிலத்தில் தினைப்புனத்தில் காதல் அரும்பும், பின் அருவிக் கரையிலே மொட்டாகும், முல்லையிலும், மருதத்திலும், நெய்தலிலும் தளிர் நடையிட்டு,மணம் பரப்பிச் செம்மையுறும். இன்பத்தின் மடியிலே இன்னிசை இயம்பிடும் இளங்காதற் சிட்டுகள் பொருள் நாடியோ, புகழ் தேடியோ, மற்ற நாட்டின்மீது படையெடுத்தோ அல்லது அகவாழ்வு வாழ்ந்தது போதும், இடையிலே புறவாழ்வும் வாழுவோம் என்று எண்ணியோ, அகமும் புறமும் மயங்கிய தமிழ்க் காதலன் தன் செந்தளிர் மேனியளான, செண்பகவல்லியைப் பிரிய நேரிடும். அந்தப் பிரிவின் உறைவிடமாக--துன்பியல் நாடகத்தின் எழினியாக முல்லையும், குறிஞ்சியும் மற்றும் நன்னிலங்கள் திரிந்து மாறுபட்ட நிலமாகிய பாலையை அமைத்த திறம் உள்ளக் கோயிலில் எண்ணுந்தோறும், “தொட்டனைத் தூறும் மணற் கேணி” போல் இன்பமுறுவதாகத் தோன்றுகிறது. துன்பத்தை தன்னகத்தே கொண்டு கொடுமை நடைபோடும் பிரிவால் வளர்பரிவை உய்த்துணரும்போது, அது சுவையின்மேற் புத்தம்புதுச் சுவையளிப்பதாகத் தோன்றும்.

பசுமைப்பாய் போர்த்தப்பட்டு, எங்கும் எழில் தாமரை மலரும், அல்லி மலரும், குவளை மலரும், இயந்துபட்ட கவின்மிகு நீர் நிலைகளாலும், வயல் வளத்தாலும் அகத்தைத் தன் அழகால் கொள்ளை கொண்டு, தன் நீங்கா வளத்தால் தன் இன்னுயிர்ச் செல்வங்களை வாழ்வித்த அன்னை இன்று வெம்மையால் மணல் கடல்போல் பரந்துபட்டு மனதை வருத்தும் வேளை, குழுமிய செழுமை வெளிறிக் கிடக்கும் அலங்கோலம்; இளவேனிற் காலத்திலே வண்ண வண்ண மலர்களை அள்ளித் தெளித்துத் தன் புன்முறுவலைத் தரணிக்கு உணர்த்திய எழில் சோலையும், மாமலர்க் கொல்லையும் அழிந்துபட்டுத், தன் வாழ்விழந்து, இன்றோ? நாளையோ? உலர்ந்து, வெந்து, பட்டுத், வெட்டுண்டு வாழ்வின் எல்லையைக் கடக்க இருக்கின்ற பொரிந்துபட்ட சோலைகளும், தென் பொய்கைத் தென்றல் தெம்பாங்கு பாடித் தவழ்ந்து வரும் நிலைபோய், காலம் என்னும் கன்னி தன் காதலனின் பிரிவைப்பொறாமல் எழுப்பும் பெருமூச்சு அனல் காற்று, புயலாய் புறப்பட்டதனால் எழும் புழுதிப் படலம், நீலவானத்திலே தவழும் சீர் கொண்டலைத் தன்புழுதிக் கரத்தால் அரவணைத்துவிட்ட காரணத்தால் வெறிச்சோடிய நீள்பொழுது வானம் மாஞ்சோலையிலே கூவிடும் மாங்குயிலும், அழகு நடமாடும் மாமயிலும், பாங்குடன் உரைக்கும் பசுங்கிளியும் கட்டுப்பாடின்றிக்கட்டவிழ்த்துவிட்ட நிலையில் வெட்ட வெளிவானிலே சிறகடித்து வட்டமிடும் வானம்பாடிகளும் போய், பாலைவனப் பறவைகளையும், வெந்தனல் காற்று எழுப்பிடும் ஓசையும், நல் எண்ணமும், நன் மணமும், நன் செய்கையும் இல்லாத---களவாடும் எயினர் கூட்டங்கள் திரியும் பாலையிலே இயற்கையெனும் இன்பவல்லி தன் இன்னுயிர் காதலனை மாமழையை பிரிந்ததனால் ஏற்பட்ட சூழ்நிலையைப் பாலையிலே காதலனைப் பிரிந்துவிட்ட காதலியின் பிரிவின் உறைவிடமாக உருவாக்கியிருப்பது “சூழ்நிலைக்கு தக்கபடிதான் வாழ்நிலை அமையும்,நிலைக்கேற்றபடிதான் நினைவலைகள் எழும்” என்று மூதறிஞர்கள் பொன் உரைகளை நினைவூட்டுவதாகவன்றோ அமைகிறது.

வளத்தோடு வாழ்ந்த சோலை வாழ்விழந்துபாலையாய்ப் போனநிலையைப் பாங்கோடு காதலனுடன் வாழ்ந்த பாவை அப்பாங்கைப் பிரிந்துவிட்டதை எண்ணத் தொடங்கினால், பிரிவு தோன்றினமையால் அன்பு நடமாடவேண்டிய ஆரணங்குகள் அழுதுவடிக்கின்ற கண்ணீர் திட்டுத் திட்டாய் மாநிலத்தில் தேங்கி நிற்கும் காட்சியின்போதுப் பிரிவினால் வளர் பரிவை உணரும்போதும் நினைவலைகள் முன்னும் பின்னும் பாய்வதால் பிரிவும் பரிவைப் பாரினில் வளர்க்கிறது என்பது புரிகிறது.

●

2-ம் பக்கத் தொடர்ச்சி

அளிக்க முன்வரவேண்டும். இன்று நாட்டிலுள்ள பல்வேறு கொள்கைகளையும்—கோட்பாடுகளையும் கொண்ட பல்வேறு கட்சிகளெல்லாம் தம் தம் விருப்பு வெறுப்புகளையெல்லாம் மறந்து ஒருங்கேசெயல்படத்துவங்கியுள்ளது. திராவிட முன்னேற்றக் கழகமும் அனைத்துக்கட்சிகளுடனும் ஒருங்குசேர்ந்து செயல்படத்துவங்கியுள்ளது. இந்த நேரத்தில் நாட்டைக் காட்டிக்கொடுக்கும் நயவஞ்சகப்போக்குக் கொண்ட சிலர் 'ஏன் பிரிவினை கேட்கவில்லை. பிரிவினையைக் கேளுங்கள்' என நம்மைத் தூண்டிவிடப்பார்க்கின்றனர். அவர்களின் இந்தத் துரோகத்தன்மையை ஒதுக்கித் தள்ளிவிட்டு, எல்லையைக் காக்க நம்மால் இயன்றதைச்செய்து கொண்டு வருகிறோம்.

பணம் படைத்தோர் பாரியைப் போல் ஓரியைப்போல் பணத்தை வாரி வழங்கவேண்டும். நடுத்தர வாதிகளும், ஏழை எளியவர்களும், தொழிலாளர் பெருமக்களும் தம்மால் இயன்றதை—தேவை போக மிஞ்சியதை அளிக்கவும் முன்வந்து, எவ்வளவு விரைவில் அளிக்கமுடியுமோ அவ்வளவு விரைவில் அனுப்பினால், நாம் நம் கடமையைச்செய்தவர்களாவோம். சேரன் உதயஞ்சேரலாதன் வாழ்ந்த நாடு என்பதை மெய்ப்பித்தவர்களாவோம்!

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

பொழுது புலர்ந்தது. படுக்கையை விட்டு வெளியில் சென்றாள் அமுதா.

அடுத்த வீட்டார் செய்தித்தாள் படிக்கும் ஓசை அவள் காதில் விழுந்தது.

சீனர்கள் நம் எல்லையைப் பிடிக்க வந்துவிட்டனர். நமது படைகள் வீரத்தோடு போர் செய்கின்றனர். சீனப் படையில் ஆட்சேதம் அதிகம். நம் படையில் பத்துப் பேர்கள் இறந்தார்கள் என்று படிக்கும் வார்த்தைகளைக் கேட்ட அமுதாவின் நெஞ்சம் நறுக்கிட்டது.

பத்துப் பேர்கள் இறந்தார்கள் என்ற செய்தி அவளை மீளாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டது. "கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாதோ—என்று கலங்கினாள்.

கண்ட கனவுகளும், கட்டிய மனக்கோட்டையும் இடிந்து தூள் தூளாயின! கண்கள் கண்ணீரைத் தாரை தாரையாக வடித்தது. இன்பத்தில் திளைத்த உள்ளம் துன்பத்தில் மூழ்கியது.

ஆம்! கணவனைப்பற்றியே எண்ணிக்கொண்டிருந்த அவள் காதிற்கு மிதி வண்டியின் மணியோசைகூடக் கேட்கவில்லை. அம்மா என்று ஒரு ஆள் கூப்பிட்ட ஒலி அமுதா காதில் இலேசாக விழுந்தது. அவசரமாக எழுந்து ஓடினாள் வாசலுக்கு. பணம் வந்திருக்கம்மா என்று கூப்பனை நீட்டிக் கையெழுத்து வாங்கிக் கொண்ட தபால்காரர் ரூபாயை எண்ணிக் கொடுத்தார். அவள் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவில்லை! அடுத்த கணம் தந்தியும் ஒன்று என்று நீட்டினார். அவசரமாகப் புறப்பட்டுவிட்டார் தன் கணவர் என்று எண்ணிய அமுதா கவரைப் பிரித்துப் படிக்கச் சொன்னாள் தபால்காரரிடம்.

"நீலவண்ணன் நேற்றுக் காலையில் வீர மரணம் அடைந்துவிட்டார். இங்கேயே அடக்கம் செய்துவிட்டோம். மற்றத் தகவல்களும், புகைப்படமும் அனுப்பி வைக்கிறோம்" என்று எழுதப்பட்ட செய்திதான் கவருக்குள் இருந்தது.

ஐயோ! என்று தலையில் அடித்துக்கொண்டு அலறினாள், புலம்பினாள். கண்கள் இருண்டன; காதுகள் அடைத்தன. அவள் வாழ்வு... அன்று முதல் அமங்கல வாழ்வு தானே.........!

இருப்பினும் என் செய்வது விழித்துப் பார்த்தாள். வீர மரணம் எய்திய தன் கணவரைப்பற்றி எண்ணினாள். வீரப்புயல் வீசிற்று......என் வாழ்வைக் கெடுக்கக் காரணமாய் இருந்த எதிரியை விடுவேனா என்று எழுந்தாள் ஆவேசத்தோடு! எல்லையைக் கொள்ளை கொள்ள வரும் அந்தக் கயவர் கூட்டத்தைப் பூண்டோடு வேரறுக்க புறப்படு மகனே! போருக்கு என்று கூறி வண்டியில் பூட்டப்பட்ட காளைகள் துள்ளிப் பாய்வதுபோல் இரண்டு குழந்தைகளும்முன்செல்லத் தான் பின் செல்பவளாய் வந்த பணத்தில் பாதியை பாதுகாப்பு நிதிக்கு அளிக்கப் போகிறேன் என்றுரைத்து, அரசைப் புகழ்ந்தும், வீரரைப் போற்றியும், எதிரியை இகழ்ந்தும் அவள் செல்வது மல்லிகை நாறும் மலைச்சாரற் கண் வீரம் மிக்கப் புலி சிறிக்கொண்டு மான் கூட்டத்தில் பாய்வது போலவும், இருட்டைப் போக்க ஞாயிறு எழுவது போலவும், மணல் பரக்கவும், கற்பிளக்கவும், வழியென்றும் காடென்றும் பாராது மனச் செருக்கோடு பாரம் ஏற்றிய வண்டியை இழுத்தோடும் கடா போன்றும் அவள் செல்லும் காட்சி கண்ணுக்கும் கருத்துக்கும் களிப்பூட்டுகிறதல்லவா?

❋

பொங்கல் மலர்

இவ்வாண்டுப் பொங்கல் மலர்

மிகச் சிறந்த முறையில்

கருத்தும் வனப்பும் மிக்கதாய்

வெளியிடும்

ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன.

காதலுக்குப் பொருள்....?

—[குழலோன்]—

அன்று என் தமயனிடமிருந்து கடிதம் வந்திருந்தது. ஆவலுடன் பிரித்துப் படித்தேன்....

குமார்!

உன் மடல் பெற்றேன். அண்மையில் வெளியான உன்னுடைய சிறு கதைகள் யாவற்றையும் படித்தேன். நடையில் நல்ல வேகம்! ஆனல் கருத்து...? எந்தக் கதைக்கும் கருப்பொருள் காதல்தானு? உலகத்தின் காதல் தவிர வேறு எதுவும் இல்லையா? அன்ருட வாழ்க்கைக்கு அல்லல்படும் ஏழை! குடிக்கக் கூழின்றி, படுக்கப் பாயின்றி, இருக்க இடமின்றி நடுத்தெருவில் நாயாய் அலைகிருர்களே 'ஆயிரமாயிரம்'பேர்! அவர்களெல்லாம் உன்கண்களில் படவில்லையா? சாதாரண தேவைகளைக்கூட நிறைவு செய்து கொள்ள முடியாமல், ஆற்ருமையால் அவதியுறும் பாட்டாளி மக்கள் உன் எழுத்துக்குக் கருவாக, நாட்டு நடப்புக்கு வழி காட்டியாக ஏன் இருக்கக் கூடாது? ஆகவே, சாதாரண மனிதத் தேவைகளை மூலமாகக் கொண்டு, ஆற்ருமையை விளக்கும் அவல வாழ்க்கையை உலகுக்கு எடுத்துக்காட்டி, அதைப் போக்கும் முறைகளைக் கூறு! வருங்கால சமுதாயத்தின் கேள்விக் குறியை நீக்கி முற்றுப் புள்ளி இடு! அதனின்றும் உன் எழுத்தின் ஒளி, சுடராகி மின்னும்!

உன் அண்ணன்

குணசீலன்.

ஆம்! அண்ணன் கூறுவதும் உண்மைதான். உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றி வந்த காதலைச், சந்தைக் கடையில் ஏலம் போடுவது போல், 'காதல்! காதல்!!' என்று எல்லாவற்றிலும் புகுத்தி, அதன் புனிதமே மடிந்து, வெறும்சொற்கள் தான் மிஞ்சியிருக்கின்றன. சோற்றுக்கில்லாமல் அவதியுறுபவர்கள் மலிந்துவிட்ட இந்நாளில், காதலாவது? கத்திரிக்காயாவது?

மாலை மணி ஏழிருக்கும்! இராயபுரம் கடற்கரைச் சாலை வழியாக நடந்து கொண்டிருந்தேன். என் அண்ணனின் அறிவுரைப்படி, கதை ஒன்று எழுத, என் மூளை ஓயாமல் கருப்பொருள் தேடிக்கொண்டிருந்தது. சிந்தனையுடன் சென்று கொண்டிருந்த நான் திகைத்தேன்! அங்கே...! வளரும் சமுதாயச் செடியின் ஒரு மொட்டு! செடியில் மலரக் காத்திருக்கும் மொட்டு அல்ல அது! வறுமைக் காற்றுல் சிதறி விழுந்த பரிதாபமான உயிர்! அந்த உயிருக்காகக் கவலை கொள்ளும் எவரும் அங்கில்லை!

வறுமைச் சூருவளியில், வரண்ட பூமியாகிவிட்டிருந்தது அந்த உடல். ஆம்! கருமை படர்ந்த தோல்! அதிலே இளமையின் மினுமினுப்பு! இலக்கியத்தில் உருவாக்கிய பெண்ணின் இடைபோல் 'உண்டோ? இல்லையோ?' எனும் ஐயத்திற்கு பொருளான நிலையில் வயிறு! பரட்டைத் தலை! கருவளையமிட்ட, ஒளிச் சுடர் அழிந்து, கருகிய அகல் விளக்கின் திரியான கண்கள்!

அந்த அலங்கோலக் காட்சிக்கு உணவான அப்பெண்–ஐந்து வயது நிரம்பியவள்—அரை வயிற்றுக் கஞ்சிக்கு ஆலாய்ப் பறந்து, நிலை இழந்து மயங்கி விழும் வேளை, நல்லகாலமாக என்னுல் காப்பாற்றப்பட்டாள்.

அருகிருந்த தேனீர் இல்லத்திற்கு அழைத்துச் சென்று; வேண்டிய மட்டும் சிற்றுண்டி உண்ணச் சொன்னேன். உண்ண அலைந்த அளவுக்கு, ஆற்றலில்லை!

'பாப்பா! உன் பேரென்ன?'

'என் பேர் இளவரசி!'—பெயரில் ஒன்றும் குறைவில்லை! நிலை......?

'உனக்கு அப்பா, அம்மா இருக்காங்களா?'

'அம்மாதான் இருந்தாங்க—நேத்து இராத்திரியிலே இருந்து காணேம்!'

'உங்க வீடு எங்கே?'

'எங்க வீடா? அதோ, அந்தப் பக்கத்திலே இருக்குது!' என்றவாறு மீனவ குடிசைகள் பக்கம் கை நீட்டிக் காட்டினுள். இங்கிருந்து சுமார் அரை மைலுக்கு மேல் இருக்கும்!

'சரி வா பாப்பா! உன் வீட்டுக்கு போகலாம். அம்மா வந்துவிட்டாங்களா பார்க்கலாம்!' என்றேன்.

அவள், எனக்கு வழிகாட்ட முன்னுல் நடந்தாள். நான் பின்தொடர்ந்தேன். அந்தப் பிஞ்சுக்கைகளை முன்னும் பின்னும் வீசி, மிரட்சியும் அன்பும் கலந்த பார்வையுடன், அடிக்கொருதரம் என்னைத் திரும்பித்திரும்பிப் பார்த்தவண்ணம் நடக்கும் அழகே அழகு! அன்பும், அழகும் எங்கும் நிறைந்துதானிருக்கிறது. அதை இரசிக்கத் தெரிந்தவனுக்குத்தான், அது தன் தன்மையை உணர்த்தும்

போலும்! உலகின் அத்தனைக் கண்களும், என்னையே பார்ப்பது போன்ற ஒரு பிரமை!

குடிசையினுள், சிறிய விளக்கொளி மினுக்மினுக் என்று விளையாடிக்கொண்டிருந்தது! ஏதோ ஒரு உயிர் உள்ளே உறைந்திருக்க வேண்டும் என்ற நிச்சயத்துடன் உள்நுழைந்தேன். எழுத்தைத்தவிர, வேறு எதற்கும் வணங்காத என் தலை, அந்த குடிசைக்குத் தலை வணங்கியது. ஆம்! அவ்வளவு சிறிய வாயில்! நண்டு வளையாக இருந்த அந்தக் குடிசையின் உள்புறம் பார்க்க அலங்கோலமாகக் காட்சி அளித்தது.

கிழிந்து தொங்கும் துணிகள், மண் உதிர்ந்த அந்தச் சுவர்கள், பானைகளும் சட்டிகளும்,அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறிக் கிடக்கும் காட்சி. அருவருப்பை அளிக்கத்தான் செய்தது! ஆனாலும் அவர்களின் பரிதாபமான நிலையையும் எண்ணாமல் இருக்க முடியவில்லை!

அங்கொரு மூலையில், சிறிய மாடத்தில், அகல்விளக்கு ஒன்று, தன் பழங்காலப் பெருமையையும், தற்கால நிலைமையும் சரிபார்த்து, அழுது வடிந்துகொண்டிருந்தது.

குடிசையின் நடுவில், கிழிந்த பாயொன்றில், மலர்உதிர்ந்த நாராக, இலையுதிர்ந்த மரமாக, ஒரு பெண் உருவம் தலைமயிர் கலைந்து, உடலை மறைக்கமுடியாத அரையாடையுடன் அலங்கோலமாக, மிகவும் களைப்புற்றவள்போல் படுத்துக்கிடந்தாள்.

அருவருப்புடன், வெளியேறத் திரும்பியவன், 'அப்பா!' என்று அலறியவாறு தலையைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்துவிட்டேன். தாழ்ந்து கிடந்த குடிலின் வாயில், நெற்றியை நன்றாகப் பதம்பார்த்துவிட்டது! பொறி கலங்க கண்களில் நீர் நிறைந்துவிட்டது!

'யாரது?' என்றவாறு அலறிப் புடைத்துக்கொண்டு எழுந்த அவள், தன் சேலைத் தலைப்பைச் சரிசெய்துகொண்டு, தலைச் சிகையை கைகளாலேயே கோதி விட்டுக்கொண்டாள்.

தயங்கியபடி திரும்பினேன். 'நான் இராயபுரத்தில் வசிப்பவன். உன் குழந்தை, பசியால் வாடி, மயங்கி விழும் வேளை, காப்பாற்றி உண்ணச் சிற்றுண்டி வாங்கி அளித்து, அழைத்து வந்தேன்!' என்றேன்.

'நன்றி ஐயா!' — திகைத்துவிட்டேன். நன்றி சொல்லும் அளவுக்கு நாகரிகம் தெரிந்திருக்கிறதே!

'சின்னஞ் சிறு குழந்தையைத் தனியே தவிக்கவிட்டு, இரவு எங்கு சென்றாய்?'—என்றேன்.

யாவற்றையும் கடந்த சிரிப்பு, அவள் இதழ்களில் விரக்தியுடன் வெளிப்பட்டது.

'நேற்று, என் வயிற்றுப்பாட்டிற்காக சென்றிருந்தேன். இப்போதுதான் திரும்ப முடிந்தது வீட்டிற்கு!' என்றாள்.

நாகரிகமாகப் பேசுகிறாள். படித்தவள் போலும் தோன்றுகிறது! இந்த நிலை வரக்காரணமென்ன? என்ற கேள்விக்குறி, என் மனதில் எழுந்தது. அதற்கு விடையறியவும் ஆவல் அதிகமாகியது. எழுத்தாளன் அல்லவா? ஏதாவது 'பிளாட்.' கிடைக்கும் என்ற சுயநலம்தான்! அஃதும் அன்றாட வாழ்க்கைத் தேவைகளில்லாமல், ஆற்றாமையால் அலைகழிக்கப்படும், 'ஐயோ பாவங்களைப்'பற்றி, எழுதும்படி என் அண்ணன் இன்றுதானே அறிவுறுத்தினார். அந்த ஆவல்வேறு என்னை அலைக்கழித்தது! கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவவிடுபவன் நிச்சயம் முட்டாள்தான்!

'வெட்கமாக இல்லை உனக்கு! வயிற்றுப்பாட்டிற்காக இரவு நேரத்தில் சென்றிருந்தேன்! என்று கூற' —என்றேன்.

'வெட்கமா? மானம் கெட்ட வாழ்க்கை நடத்தும் எனக்கு வெட்கம் ஒரு கேடா?'—என்றாள்.

'மானம்கெட்ட வாழ்க்கை என்று தெரிந்தும், ஏன் இதை மேற்கொண்டாய்?' தூண்டிலைப், புழுவுடன் நீரில் அமிழ்த்திவிட்டேன். இனி மீன் சிக்க வேண்டியதுதானே?

'மிகச் சாதாரணமாகக் கேட்டுவிட்டீர்கள், 'ஏன் மேற்கொண்டாய்' என்று! இல்லை என்றால் வேறு வழி? இன்று என் மகளுக்கு, இரக்கப்பட்டு உணவு வாங்கி அளித்தீர்கள். அதை நான் வேண்டி நின்றிருந்தால், நீங்கள் உதவியிருப்பீர்களா?'

'நிச்சயமாக!' அசாதாரண அழுத்தம் என் குரலில் ஒலித்தது.

'என் மகளுக்கு உதவும்போது உங்கள்மனம் என்ன எண்ணியது?'

'பாவம்! ஏழைச் சிறுமி! பசியால் கருகிவிடக்கூடாது!' என்ற பரிதாப உணர்ச்சி,—என்றேன்.

'ஆனால், எனக்கு உதவும்போது என்ன எண்ணியிருப்பீர்கள்?'

சிக்கலான கேள்விதான். ஆம்! நான் என்ன எண்ணியிருப்பேன்...? என்ன எண்ணியிருப்பேன் என்று எனக்கேப் புரியவில்லை!

'என்ன விழிக்கிறீர்கள்? நீங்கள் என்ன எண்ணுவீர்களோ? உலகம் நிச்சயம், என்னையும்; உங்களையும் இணைத்துத்தான் எண்ணும். அப்போதும், என் நிலை இழிநிலையாகத்தான் கருதப்படும்! ஏழ்மைக்கு உதவ ஆளில்லாவிட்டாலும், ஏச்சும் பேச்சும் பேசமட்டும் தவறுவதில்லை!' —என்றாள். மீன், என் தூண்டிலினின்றும் நழுவுவதை உணர்ந்தேன். நேராகவே கேட்டுவிடுவதுதான் நல்லது என்று எண்ணியவன் 'நீ உண்மையை மறைக்கிறாய்? உன் கடந்த காலம் என்ன என்று கூறு?' என்று கேட்டேன்.

'கடந்த காலம்! எத்தனையோ பேர்களிடம், எத்தனையோ முறை கூறிவிட்டேன். அதில் நீங்களும் ஒருவராகுங்கள். நான் பிறந்தது செங்கோட்டை அடுத்த கிராமம் ஒன்றில். சிறு வயதில் தாய் தந்தை இழந்த நான், சிகந்திராபாத்தில் என் மாமாவிடம் வளர்ந்தேன். அங்கு இரயில்வேயில் ஏதோ வேலை அவருக்கு! அங்கு படித்துக்கொண்டிருந்தபோது, எதிர்பாராத விதமாக ஒருவரைச் சந்திக்க நேர்ந்தது. எங்களுக்குள் அன்பு வளர்ந்தது! தவறு! என்னுள் அன்பு வளர்ந்தது! அவருக்கு ஆசைதான் வளர்ந்தது!

அவர் ஆசைக்குப் பயன் விளைந்தது. நான் தாயானேன்.

(இங்கும் காதல்தானா...!)

'பாவிப் பெண்ணே! உன்னை மணந்து, வரண்ட வாழ்க்கையை வளம்செய்து கொள்ளலாம் என்று எண்ணினேன்! மானம் கெட்டவளே, மரியாதையாக இங்கிருந்து போய் விடு! என்று வீட்டைவிட்டே விரட்டினார் மாமா. அவரிடம் சென்றேன். சென்னைக்கு இருவருமாக இரயில் ஏறினோம். நாட்கள் இரண்டு இன்பமாகக் கழிந்தது. நாயகன் மறைந்துவிட்டார். நான் எச்சில் இலையாக நடு வீதியில் எறியப்பட்டேன். உண்டவன், களைப்புத் தீர்த்துக்கொள்ளச் சென்றுவிட்டான். நான் நாய்களுக்

பதிவு எண். எம். 4642

தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

கும், காக்கைகளுக்கும் விருந்தானேன். வாழ்க்கையில் ஏற்பட்ட வெறுப்பும், வறுமையும் என்னை இந்நிலைக்கு அழைத்து வந்தது!

'உன்னை ஏமாற்றியவன் யார்? என் அண்ணன் நீண்ட நாட்களாக அங்குதான், சிகந்திராபாத்தில் இருக்கிறார். அவருக்கு ஓரளவுக்கு யாவரையும் தெரிந்திருக்கும். அவர் மூலமாக உனக்கு ஏதாவது உதவ முடியும்!' என்றேன்.

'திருட்டுப்போன தின்பண்டத்தைத் தேடுகிறீர்கள்!' என்றாள்.

'திருட்டுப்போன தின்பண்டமா?'—புரியாமல் விழித்தேன்.

'ஏன் புரியவில்லையா? திருட்டுப்போன பொருள், வைரநகையாக இருந்தால், தேடினாலும் பொருளும் கெடாமல், மதிப்பும் அழியாமல் கிடைக்கும்! தின்பண்டத்தைத் திருடியவன், அதைப் பத்திரமாகவா வீட்டில் வைத்திருப்பான். அப்போதே தின்றிருக்கமாட்டானா? அந்த நிலை எந்நிலை என்றேன்!' என்றாள்.

'அருமையான விளக்கம்!' என்று என் மனதுள் மகிழ்ந்தேன்.

'அதற்காக இல்லை! உனக்கில்லா விட்டாலும், உன் மகள் இளவரசிக்காவது ஏதாவது நன்மை செய்யலாமே!' என்றேன்.

'அவர் பெயர் குணசீலன்! வேறு எதுவும் தெரியாது!' என்றாள். 'என்ன குணசீலனா!?'— என்றவன் அப்படியே இடிந்த மண்டபமாக அமர்ந்துவிட்டேன். என் மூளையில், இடி இடித்தது! மின்னல் வெட்டியது. இதயம் வேகமாகத் துடிப்பதும் நிற்பதுமாக இருந்தது. இரத்த நாளங்களெல்லாம் தெறித்துவிடும்போல் ஒரு வேதனை. அந்தக் குடிசை, புயல் காற்றில், சிதறிப் பறப்பது போல் ஓர் உணர்ச்சி.

"சகோதரரே! அறிவுரை கூறினீரே எனக்கு! 'காதல்தான் கருப் பொருளா? தேவை கிடைக்காமல் ஆற்றாமையால் அல்லலுறும் ஆயிரம் பேர்கள் இல்லையா? என்று. இதோ பார்! உன்னால் ஏமாற்றப்பட்டு, காதல், வறுமை, ஆற்றாமை ஆகியவைகளால் அலைக்கழிக்கப்பட்டு, அவல வாழ்வு வாழும் அபலையை! காதலுக்குப் பொருள் புரியாதவர் போலும் நீர்! அதுதான் 'காதல்' என்ற வார்த்தையே கசக்கிறது உங்களுக்கு! உங்கள் மனச்சாட்சியே உங்களைச் சித்திரவதை செய்கிறது! அதுதான், காதல் என்ற வார்த்தையைக் கண்டாலே வெறுக்கும்படி தூண்டுகிறது உங்களை! உங்கள் அகராதியில், காதலுக்குப் பொருள் கயமை போலும்! நாட்டில் உங்களைப் போன்றவர்கள் நிறைந்திருப்பதால்தான் வறுமையும், ஆற்றாமையும் நிறைந்து விட்டிருக்கிறது. தான் செய்யும் தவறுகளை மறைக்க, மற்றவர்களுக்கு அறிவுரை கூறுவது, 'அது தவறு! இது தவறு!!' என்று. சே! வாழ்க்கையின் பின்னணியே பயங்கரம் தான்!

O

மறுநாள் காலை தினத்தாள் செய்தி இது!

எழுத்தாளர் குமார் கைது! நேற்று இரவு, இராயபுரம் அருகில், இராசம் என்ற பெண்ணுடன் பேசிக் கொண்டு இருந்தபோது, அந்த வழியாக வந்த, போலீஸ் இன்ஸ்பெக்டர் அவர்களால் கைது செய்யப்பட்டார்கள். எழுத்தாளர் குமாருக்கு ரூ. 50/- அபராதம் விதிக்கப்பட்டது. இராசம் அனாதை விடுதிக்கு அனுப்பப்பட்டாள். —(ந. நி.)

O

வேடிக்கை கலந்த வேதனைதான் இந்த உலகம் போலும்!

★

இராஜ்யசபையில் அறிஞர் அண்ணா அவர்கள் கம்யூனிஸ்டு சீன ஆக்கிரமிப்பைக் கண்டித்து 12—11—62ல் பேசிய பேச்சு புத்தக வடிவில் வெளி வந்துவிட்டது.

"இராஜ்யசபையில் அறிஞர் அண்ணா"

விலை 20 காசு

மற்றும் கைவசமுள்ள நூல்கள்:--

அறிஞர் அண்ணாவின்

எல்லோரும் இந்நாட்டு மன்னர் விலை 1—00

கம்பரசம் (2-ம் பாகம்) ,, 0—50

வியாபாரிகளுக்கு 25% கழிவு உண்டு.

விபரங்கட்கு:— சுகுமாரன் பதிப்பகம், சின்னக் காஞ்சிபுரம்.

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.